Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ். மக்களின் நன்மை கருதி

EXPO AVIATION

LION AIR

SERENDIB EXPRESS

யாழ். - கொழும்பு - யாழ்.

மூன்று விமானங்களுக்கான ரிக்கெற்றுக்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள...

ஹெப்பி இம்பெக்ஸ்

புதிய உயர் கல்லூரி


95, பருத்தித்துறை வீதி (ஆரியகுளம் முன்பாக)

யாழ்ப்பாணம். 021 - 2226144

24 மணி நேர சேவைக்கு 077-6038505

(சி-1096)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 06 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஜ.ஆகிர் 24 (23.08.2003) சனிக்கிழமை இதழ்: 323



அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளை, நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் நேற்று சந்தித்து உரையாடிய போது எடுக்கப்பட்ட படம். (படம் - ராஜ்குமார்)

# குடாநாட்டு நிலவரம் குறித்து நோர்வே தூதுவருக்கு மகஜர்

## அரசசார்பற்ற நிறுவனங்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை யாழ்ப்பாணத்துக்கு விஜயத்தை மேற்கொண்ட இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கரிடம், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் குடாநாட்டு நிலைவரம் குறித்த மகஜர் ஒன்றினைக் கையளித்துள்ளனர்.

இந்த மகஜரில் - யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் வாழ்கின்ற மக்கள், அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருகின்றனர். 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் உயர்பாதுகாப்பு வலயம், மிதிவெடி போன்ற பிரச்சினைகளால் மீளக்குடியேறமுடியாத நிலை தோன்றியுள்ளது.

அவர்கள், சுதந்திரமாக விவசாயம், மீன்பிடி போன்ற தமது சுயதொழில்களைச் செய்யமுடியாது, வேறு உழைப்புகளுமின்றி நிவாரணத்தை நம்பி வாழும் நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.


உயர்பாதுகாப்பு வலயத்தினால், 57 கிராமசேவகர் பிரிவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டு 18 மாதகாலமாகியும், இப்பிரச்சினைக்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து மீளக்குடியேறியோருக்கு, அரசாங்கம்- 25 ஆயிரம் ரூபா மீள்குடியமர்வுக் கொடுப்பனவாகவும், 75 ஆயிரம் ரூபாய் வீட்டுக்காகவும் வழங்குவதாகக் கூறியபோதும், தற்போது மீளக்குடியேறிய 45 ஆயிரம் குடும்பங்களில் - ஆறாயிரம் குடும்பங்களுக்கே இதுவரை மீளக்குடியமர்வுக் கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது. அதேபோல வெளிநாட்டு

(12 ஆம் பக்கம்பார்க்க)


# உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள இழந்த வீடுகளைப் பார்த்து மிகவும் மனம் வெதும்பினேன்!

## விண்ணாணம் விநாசியர்



வீட்டைப் பார்த்தவருக்கே இப்படியெண்டால், வீட்டுக்காரருக்கு எப்படியிருக்கும் பாருங்கோ...

## யாழ். வந்த நோர்வே தூதுவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

**உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் இடிந்த கட்டடங்களையும், பற்றைக் காடாகக் கிடக்கும் விவசாய நிலங்களையும் பார்த்தபோது மனம் வெதும்பியது.**

**என்று நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்தார்.**

**யாழ்.செயலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

**அவர் அங்கு தொடர்ந்து கருத்துத்தெரிவிக்கையில்-**

இருபது வருடகாலமாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற யுத்தத்தின் அழிவுகளை, தற்போதைய எனது யாழ்.விஜயத்தின்போது நேரில் பார்வையிட்டுள்ளேன்.

யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளக்கூடிய அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை பற்றி மேலும் விரிவாக ஆராயவுள்ளேன்.

அழிந்த பகுதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கு, நோர்வே வேண்டிய உதவிகளைச் செய்யவுள்ளது. குடாநாட்டு மக்களின் உணர்வலைகளை அறிவதற்கு, பல்வேறு தரப்பு மக்கள் அமைப்பு பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளேன்.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு, ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சமாதான வழிமுறைகள் கடினமானதாகும். ஆனாலும், இறுதி இலக்கு நம்பிக்கையூட்டுவதாக உள்ளது என, நோர்வே திடமான நம்பிக்கை கொண்டுள்ளது.

மேலும், பிரான்ஸின் பாரிஸில் தற்போது இடம்பெற்றுவரும் தமிழீழ

(12 ஆம் பக்கம்பார்க்க)



இடைக்காலநிர்வாக தீர்வு யோசனைகள் தொடர்பாக, பாரிஸில் நடைபெறும் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றுள்ள புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா ஆகியோரைக் படத்தில் காணலாம்.

## கிழக்குப் பகுதி நிலைவரம் குறித்து

# புலிகளுடன் ரெலவ்சன் நாளை மறுநாள் சந்திப்பு

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண முக்கியஸ்தர்களை, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சன் சந்தித்துப் பேசவுள்ளார். நாளை மறுநாள் நடைபெறும் இச்சந்திப்பில் - பிரதான நிறைவேற்று அதிகாரி அக்கெடல் மற்றும் பேச்சாளர் அக்னஸ் பிரகர் டோட்ரயர் ஆகியோர் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

புலிகளின் தரப்பில் - திருகோணமலைக் கட்டளைத் தளபதி கேணல் பதுமன், திருகோணமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர் என கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிரகர் டோட்ரயர் தெரிவித்தார்.

## வயோதிபர் மீது கடற்படை தாக்குதல்!

வேலணைப் பகுதியில் கடற்படையினரால் கத்தியால் கீறப்பட்டும், துப்பாக்கியால் தாக்கப்பட்டும் படுகாயமடைந்த நிலையில், இரு வயோதிபர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வேலணை துறையூர் நாலாம் வட்டாரத்தைச் சேர்ந்த அம்பலவி நாகேஷ் (வயது 80) சோமசுந்தரம் சரஸ்வதி (வயது 80) ஆகிய இருவருமே கடற்படையினரால் தாக்கப்பட்டவர்களாவர்.

நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் இவர்களது வீட்டுக்கு கத்தி மற்றும் துப்பாக்கிகள் சகிதம்

(12 ஆம் பக்கம்பார்க்க)

# அதிரடிப்படையினர் மீது அம்பாறையில் கல் வீச்சு!

(மட்டக்களப்பு)

சாய்ந்தமருதுவில் இரு இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவர்களை விடுதலை செய்யக்கோரியும் நேற்று அம்பாறையில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸாரை நோக்கி கற்களை வீசி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை சாய்ந்தமருது ஜிம்மா பள்ளிவாசலில் தொழுகை முடிந்தவுடன் நாடாளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபா பள்ளிவாசலிலிருந்து ஒலிபெருக்கி மூலம் உரையாற்றிக்கொண்டிருந்தார். இதன்போது பள்ளிவாசலின் முன்பாகக் கூடிய முஸ்லிம் இளைஞர்களும் பொதுமக்களும் சுலோக அட்டைகளையும் பதாகைகளையும் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர்.

(12 ஆம் பக்கம்பார்க்க)

EXPOAIR

your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297

0712348888 0712349999 074512666 01360290 01360291

email . jaffna @ expoavi . com.

எக்ஸ்போஎயார்

வான் வெளியில் உங்கள் தோழன்...

(சி -1139)

## வடமராட்சி கல்வி வலய

# சமூகக்கல்விப் பாடப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டன!

(ஆழியவளை)

வடமராட்சி கல்வி வலய மட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான சமூகக்கல்வி போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் பிரிவு ரீதியாக முதல் ஐந்து இடங்களைப்பெற்ற மாணவர்களின் விபரங்கள் பின்வருமாறு-

**பிரிவு -01**

**தரம்- 6,7**

பா.நரேந்தா (கெருடாவில் இ.த.க.பாடசாலை), செ.அஜந்தா (குடத்தனை அ.மி.த.க.பாடசாலை), ஜே.சுஜேந்தினி (குடத்தனை அ.மி.த.க. பாடசாலை), கி.நிரோஜினி (குடத்தனை அ.மி.த.க.பாடசாலை), சு.கமலலிங்கம் (நாகர்கோவில் மகா வித்தியாலயம்).

**தரம்- 8,9**

கு.சிவரூபன் (நாகர்கோவில் மகா வித்தியாலயம்), சி.சிவஸ்கரன் (குடத்தனை அ.மி.த.க.பாடசாலை), பா.விஜிதா (குடத்தனை அ.மி.த.க. பாடசாலை), சி.நிசாந் (கெருடாவில் இ.த.க.பாடசாலை), ஆர்.நிரோஜினி (கெருடாவில் இ.த.க.பாடசாலை), கு.யூபா (தாளையடி றோ.க.த.க. பாடசாலை).

**தரம்- 10,11**

உ.மணிமாறன் (நாகர்கோவில் மகா வித்தியாலயம்), அ.உதயரூபன் (குடத்தனை அ.த.க.பாடசாலை), ச.சபிதா (குடத்தனை அ.த.க.பாடசாலை), சி.வர்ணறூபி (நாகர்கோவில் மகா வித்தியாலயம்).

**பிரிவு-02**

**தரம்- 06, 07**

க.அருள்தீபன் (உடுத்துறை மகா வித்தியாலயம்), செ.தினேஷ்குமார் (மருதங்கேணி இ.த.க.பாடசாலை), கோ.அனுசியா (கம்பர்மலை அ.த.க. பாடசாலை), சி.பிரசாந் (செம்பியன் பற்று அ.த.க.பாடசாலை), பா.திவாகர் (யாக்கரு விநாயகர் வித்தியாலயம்).

**தரம்- 08, 09**

தெ.கஸ்தூரி (உடுத்துறை மகா வித்தியாலயம்), க.இளங்கோ (உடுத்துறை மகா வித்தியாலயம்), செ.பாமினி (வல்வெட்டி இ.த.க.பாடசாலை), ரி.பத்மநாதன் (வேலாயுதம் மகா வித்தியாலயம்), சி.கோபிகா (கம்பர்மலை அ.த.க.பாடசாலை).

**தரம்- 10, 11**

க.கலைவாணி (கம்பர்மலை அ.த.க.பாடசாலை), க.விஜயகாந்தன் (உடுத்துறை மகா வித்தியாலயம்), த.அபிராமி (கரணவாய் மகா வித்தியாலயம்), த.சரண்யா (வல்வெட்டி இ.த.க.பாடசாலை), இ.கார்த்திகா (அம்பன் அ.மி.த.க.பாடசாலை).

**தரம்- 12, 13**

ரி.ஜெகஜீவன்ராம் (வேலாயுதம் மகா வித்தியாலயம்), சு.நிமல்ராஜ் (உடுத்துறை மகா வித்தியாலயம்), எஸ்.சதீஸ்குமார் (சிதம்பராக் கல்லூரி), டி.ஜெயக்குமார் (வேலாயுதம் மகா வித்தியாலயம்), ஏ.ஜசீகரன் (வேலாயுதம் மகா வித்தியாலயம்).

**பிரிவு -03**

**தரம்- 06, 07**

சி.பபிதா (நெல்லியடி ம.ம.வித்தியாலயம்), இ.கிருஷிகா (வடமராட்சி ம.ம.கல்லூரி), அ.ஜீவராஜ் (ஞானசாரியார் கல்லூரி), எஸ்.தீபிகா (புற்றளை மகா வித்தியாலயம்), இ.றிஸ்வினா (தேவரையாளி இந்துக்கல்லூரி), எஸ்.திவாகர் (தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம்).

**தரம்- 08, 09**

செ.செல்வரூபன் (இமையாணன் அ.த.க.பாடசாலை), யோ.கௌசல்யா (தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம்), வீ.பிரசன்யாத் (நெல்லியடி ம.ம.வி), ஆர்.பபித்திரா (புற்றளை மகா வித்தியாலயம்), அ.ஜீவனா (ஞானசாரியார் கல்லூரி), அ.கலைச்செல்வி (வடமராட்சி மத்திய ம.கல்லூரி).

**தரம்- 10, 11**

ஜி.அனுசா (வல்வை சிவகுரு வித்தியாலயம்), ம.ஆனந்தினி (வடமராட்சி மத்திய மகளிர்கல்லூரி), வ.சௌமியா (தேவரையாளி இந்துக் கல்லூரி), கே.கிரிஜா (தும்பளை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம்), வீ.காண்டீபன் (நெல்லியடி ம.ம.வி).

**தரம்- 12, 13**

த.தனுசியா (நெல்லியடி ம.ம.வி), கு.குணாளன் (நெல்லியடி ம.ம.வி), வ.பிரதீபா (நெல்லியடி ம.ம.வி), வி.மயூரதாஸ் (புற்றளை மகா வித்தியாலயம்), ஆர்.வித்தியா (புற்றளை மகா வித்தியாலயம்).

**பிரிவு - 04**

**தரம் - 06,07**

எஸ்.நஜீவபவன் (ஹாட்லிக் கல்லூரி), ஏ.பிரியங்கா (மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), என்.பவீந்திரன் (விக்கினேஸ்வராக் கல்லூரி), பி.கோகுலன் (ஹாட்லிக் கல்லூரி), கு.ரவிநாத் (விக்கினேஸ்வராக் கல்லூரி).

**தரம்- 08, 09**

ரி.முகுந்தன் (ஹாட்லிக் கல்லூரி), கே.கஜன் (ஹாட்லிக் கல்லூரி), கு.ஜனனி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), பா.குருபரன் (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), பா.பிரகலாதன் (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி).

**தரம்- 10, 11**

ஆர்.ராகுலன் (ஹாட்லிக் கல்லூரி), ஏ.அன்ரனி ஜசிந்தா (மெதடிஸ்த பெண்கள் பாடசாலை), அ.அனுதீபா (விக்கினேஸ்வராக் கல்லூரி), சி.காயத்திரி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கு.ஆன்தர்சிகா (விக்கினேஸ்வராக் கல்லூரி).

**தரம்- 12, 13**

எஸ்.காண்டீபன் (ஹாட்லிக் கல்லூரி), பி.அனிதா (மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), ரி.மயூரன் (ஹாட்லிக் கல்லூரி), க.அம்புஜாஜினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ஏ.துஷ்யந்தி (விக்கினேஸ்வராக் கல்லூரி). (122)

## அறவழி மழலைகள் விளையாட்டு விழா!

கரவெட்டி கிழக்கு - யார்க்கு அறவழி மழலைகள் கல்விப் பூங்கா விளையாட்டுவிழா, இன்று முற்பகல் 10.30 மணிக்கு யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தில் இடம்பெறும். இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச சபைச் செயலர் சி.பசுபதி கலந்துகொண்டு, போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார்.(116)

## ஆண்டுவிழா

சுண்டுக்குளி சனசமூகநிலையத்தின் 75 ஆவது ஆண்டுவிழா, இன்று நிலைய முன்றலில் நடைபெறும். இன்று காலை பிரதேச இளைஞர்களிடையே- மரதனோட்டம், சைக்கிளோட்டம் ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளன. மாலை முன்பள்ளி மாணவர்களுடைய விளையாட்டு போட்டியும், பரிசளிப்பு விழாவும் இடம்பெறும். (119)

## வேங்கை மரமாகி நின்றவன் விமானத்தில் வருகிறான்



வேல் விமானத்தில் நல்லூரான் வருகிறான்
வெற்றிகளை ஏற்றி நல்லூரான் வருகிறான்
நாள் முழுவதும் படுந்துயரை தீர்க்க நல்லூரான் வருகிறான்
நாடுபவர் நலன் ஏற்றி நல்லூரான் வருகிறான்
வேடுவர் குல வள்ளியுடன் நல்லூரான் வருகிறான்
வேங்கை மரமாகி நின்றவன் விமானத்தில் வருகிறான்
தாங்கிடமுடியாத துயர் தீர்க்க நல்லூரான் வருகிறான்
தமிழர்களின் தீர்வுதனை ஏற்றி நல்லூரான் வருகிறான்

ஏங்கிடும் மக்களின் போக்கினை மாற்ற நல்லூரான் வருகிறான்
ஈழவர் கோரிக்கை ஏற்றி நல்லூரான் வருகிறான்
தீங்குகள் இல்லாத தேசத்தைக்காண நல்லூரான் வருகிறான்
தேம்பி அழுபவர் கண்ணீரைத் துடைக்க நல்லூரான் வருகிறான்
ஓங்கார தத்துவப் பொருளாய் நல்லூரான் வருகிறான்
ஓசை ஒலியெலாம் ஆகி ஒலமன்ற நாதத்தில் நல்லூரான் வருகிறான்
பாங்கான வாழ்வுதர பாவையர் சகிதமாய் நல்லூரான் வருகிறான்
பாட்டுக்கு பொருளான பரமசிவம் வடிவத்தில் நல்லூரான் வருகிறான்

கவிமாமணி காரை எம்.பி.அருளானந்தன்

## "நின்பதம் பணிவோ மப்பா"

பொன்ரத மேறியே பாலமுருகா
பவனி வருவா யப்பா
மின்னும் ஒளியில் உன்னதம்
பொங்கிட வந்திடு வாயப்பா
இன்முகம் காட்டியே நல்லருளை
என்றும் ஈந்திடு வாயப்பா
நன்னகர் நல்லைப் பதியுறைவோனே
நின்பதம் பணிவோ மப்பா!

அரியாலையூர் சி.சிவதாசன்


## முதலாம் ஆண்டு நிறைவையொட்டி

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
நடாத்தும்

## பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி

*உயர்தரப் பிரிவு* - (க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்கள்)

*தலைப்பு* - '21 ஆம் நூற்றாண்டில் அறிவியலின் வளர்ச்சி'

முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
முன்றாவது பரிசு - ரூபா 1,000

*கீழ்ப் பிரிவு* - (க.பொ.த. சாதாரண தரமும் அதற்குக் கீழ் கற்பவர்களும்)

*தலைப்பு* - 'சூழல் மாசடைதலைத் தடுப்பதில் நமது பங்கு'

முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
முன்றாவது பரிசு - ரூபா 1,000

நிபந்தனைகள்

- கட்டுரைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
- கட்டுரைகள் அனுப்பும் போது பாடசாலையில் கற்கும் தரம் குறிப்பிடப்பட்டு, அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- கட்டுரைகள் ஆகக் குறைந்தது 300 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
- கட்டுரைகளைத் தேர்ந்தெடுப்பதில் நடுவர்குழுவினது ஆசிரியரின் முடிவே இறுதியானது.
- கட்டுரைகள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

போட்டி முடிவுதிகதி - 10.09.2003

HE ROYAL COLLEGE OF JAFFNA
ஆண்டு 1 இல் இருந்து மேற்படிப்பு வரை சிறந்த ஆசிரியர்கள், சகல பாடங்கள்
426 (302), K.K.S. Road, Jaffna. (சி-1296)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ஸ்ரீகாந், த்ரிஷா நடித்த
மனசெல்லாம்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
JUDGE AND JURY
இரவுக் காட்சி. 8.45 (பு.நே)
(சி-1285)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
விஜயகாந், கிரண் நடித்த
தென்னவன்



காட்சிநேரம்
10.30, 2.30, 6.30, 9.30
(சி-1284)

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
ஓராண்டு நிறைவையொட்டி நடத்தப்படும்

## சிறுகதை; கவிதைப் போட்டிகள்

சிறுகதை - முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
முன்றாவது பரிசு - 2,000 ரூபா

கவிதை - முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
முன்றாவது பரிசு - 2,000 ரூபா

நிபந்தனைகள்

- எழுதுபவரின் சொந்த ஆக்கமாக இருக்க வேண்டும். ஏற்கனவே பத்திரிகையிலோ, ஏனைய ஊடகங்களிலோ வெளிவராதவையாக இருக்க வேண்டும்.
- மொழிபெயர்ப்பு ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- கதைகள் ஈழநாடு பத்திரிகையின் ஒரு பக்கத்துக்குள் அடங்குவதாக இருக்கவேண்டும். தட்டச்சில் பொறிக்கப்பட்டவையாக இருந்தால் 5 பக்கங்களுக்குள்ளும் கையால் எழுதப்பட்டதானால் 7 பக்கங்களுக்குள்ளும் இருத்தல் வேண்டும்.
- கதைகள், கவிதைகள் சமகால, சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து எழுதப்படல் வேண்டும்.
- ஆக்கங்கள் யாவும் 10.09.2003 ஆம் திகதிக்குள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.
- நமது ஈழநாடு பத்திரிகையில் கடமைபுரிபவர்களோ, அவர்கள் குடும்பத்தவர்களோ இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.
- பரிசுக்குரிய ஆக்கங்களை தேர்வு செய்வது நடுவர் குழுவினதும், ஆசிரியரினதும் முடிவாகும்.

### மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண

# உயர்மட்ட மாநாட்டை கூட்டுமாறு பாதுகாப்பு அமைச்சர் உத்தரவு!



யாழ்.குடாநாட்டில் பாதுகாப்பு காரணங்களால், அங்கு வாழும் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவலங்களுக்குத் தீர்வுகாணும் நோக்கில், செப்ரெம்பர் முதல் பகுதியில் மாநாடொன்றைக் கூட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்குமாறு, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்கு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் யாழ்.மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் அவலங்கள் பற்றி கடிதம் ஒன்றை, இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மகேஸ்வரன்- பாதுகாப்பு அமைச்சர் மாரப்பனவுக்கு அனுப்பி வைத்திருந்தார். அக்கடிதத்தில் இராணுவ அரண்களால், சொந்த இடங்களில் குடியிருக்க முடியாதநிலை, விவசாயம் மேற்கொள்ள முடியாமை, ஆலயங்களில் வழிபடமுடியாமை முதலான பல்வேறு பிரச்சினைகளையும் சுட்டிக் காட்டி, இந்தப் பிரச்சினைகளினால் மக்கள் பெரிதும் நொந்து போயுள்ளார்கள் என்று குறிப்பிட்டிருந்தார். அமைச்சர் தி.மகேஸ்வரன் - விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத் திற்குமிடையே போர்நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டு ஒன்றரை வருடங்களாகியும், இப்பிரச்சினைகள் தீர்க்கப் படாமலிருப்பது, மக்கள் மனங்களில் தொடர்ந்தும் வடுக் களை ஏற்படுத்திக்கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் எல்.பி.பல கல்ல, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் டி.டபிள்யூ, கே.சந்தகிரி ஆகியோர் உட்பட யாழ்.மாவட்டத்தின் கட்டளையிடும் தளபதி, பிரதேசத் தளபதிகள் உட்பட யாழ்ப்பாண அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள் அனைவரையும் கொண்ட மாநாடொன்றுக்கு அழைத்து, இந்த விடயங்களை விரிவாக ஆராய்ந்து, தீர்வுகாணப்பட வேண்டும் என இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் விடுத்த வேண்டுகோளை, பாதுகாப்பு அமைச்சர் ஏற்றுக்கொண்டார்.

இக்கோரிக்கைக்கு அமைவாக மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகளைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ மேற்கொண்டுவருகிறார். மாநாட்டின்போது, அமைச்சர் மகேஸ்வரன் தாம் எழுப்பிய பல்வேறு பிரச்சினைகளையும் தெளிவாக விளக்கி, அவற்றுக்குத் தீர்வுகாணுமாறு கோரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# யாழ். ஓட்டோ சாரதிகளுக்கு புதிய அடையாள அட்டைகள்!

(யாழ்ப்பாணம்)

ஓட்டோ சாரதிகளுக்குப் புதிய அடையாள அட்டைகள் வழங்கப் பட்டு வருகின்றன. அண்மைக்காலமாக ஒருசில ஓட்டோ சாரதிகள்- குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டிருந்தமையினாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வட பிராந்திய முச்சக்கர வண்டிகள் மோட்டார் ஊர்தி சேவைகள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

அனைத்து ஓட்டோ சாரதிகளும் பச்சை வர்ண அடையாள அட்டையை உடனே பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும், பழைய அடையாள அட்டைகளைப் புதிப்பித்துக் கொள்ளவேண்டும் எனவும் தெரிவிக் கப்படுகிறது. புதிய சாரதிகள் - தமது பெயர்களைச் சங்கத்தில் பதிவு செய்வதன்மூலம், மூன்று மாதங்களுக்குள் சாரதி அடையாள அட்டையைப் பெறமுடியும் எனவும் தெரிவிக் கப்படுகிறது.

இதேவேளை, புதிய சாரதிகளுக்கான வீதி நடைமுறைகள், தரிப்பிட நடைமுறைகள் சம்பந்தமான வகுப்புக்களும் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

சாரதிகள், உரிமையாளர்கள் ஒவ்வொருவரும் - வாடிக்கையாளர்களால் தவறவிடப்படும் பொருட்களை- உடனுக்குடன் அலுவலகத்தில் ஒப்படைக்கவேண்டும் எனவும், அவை தொடர்பான விசாரணைகள்- வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

அனைத்து சாரதிகளும் - சங்கத்தின் பெயரைக் காப்பாற்றும்படி செயற்படவேண்டும் எனவும், நீதியான முறையிலே கட்டணங்களை வாங்கவேண்டும் எனவும் சங்கத்தினரால் தெரிவிக்கப்பட்டது.

### பாக்கு நீரிணைப் பாலம் அமைக்க

# ஜெயலலிதாவின் ஆலோசனையை இந்திய மத்திய அரசு பெறுமாம்!

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாலம் அமைப்பது தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கைகளை ஆராயும்போது, தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆலோசனையைப் பெறுவதற்குத் தீர்மானித்துள்ளதாக இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்தப் பாலம் அமைப்பது குறித்தும், இந்தியவுக்கும் இலங்கைக்குமான பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பது குறித்தும், ஜெயலலிதா தமக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கப்பல் சேவை ஆரம்பிப்பது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட இருந்த ஒப்பந்தம்-கைச்சாத்திடத் தாமதமாக இருப்பதாக இலங்கைத் துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

### குற்றச்சாட்டுக்கு மறுப்பு

கிழக்கு மாகாணத்தில் நிலவும் வெற்றிடங்களுக்குப் பொலிஸாரை நியமனம் செய்யும்போது, முஸ்லிம் மக்களுக்கு அதிக இடம் வழங்கப்படுவதான குற்றச்சாட்டில், எதுவித உண்மையும் இல்லை என அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்கள் எடுக்கும் கூட்டத்தில் பேசியபோதே, ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

### சில பொருட்களின் விலையை உயர்த்த

# நுகர்வோர் அதிகாரசபையின் அனுமதியைப் பெறல்வேண்டும்

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களை விலையேற்றும்போது - விற்பனையாளர்களும், விநியோகத்தர்களும் - நுகர்வோர் அதிகாரசபையின் அனுமதியைப் பெறவேண்டும் எனத் தெரியவருகிறது.

பால்மா (முழு அடைப்பால்மா), சமையல் எரிவாயு, சிமெந்து, நுளம்புச்சுருள், தீப்பெட்டி ஆகிய பொருட்களுக்கு விலை ஏற்றும்போதே, தற்போது நுகர்வோர் அதிகாரசபையின் அனுமதி பெறவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விரைவில், மேலும் 50 பொருட்களுக்கு இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் - விலையுயர்வினால் பாதிக்கப்படுவதைத் தடுப்பதை நோககமாகக் கொண்டே, இந்த நடைமுறை அறிமுகப்படுத்தபட்டுள்ளது.

# சிறுபோக நெல் அறுவடை இந்த வருடம் அதிகரிப்பு

சிறுபோக நெல் அறுவடை - இந்த வருடம் அதிகரித்திருப்பதாக விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார். சிறுபோக நெல் அறுவடை வருடாவருடம் 1.4 மில்லியன் மெற்றிக்தொன் ஆகும். இந்த வருடம் 2.6 மில்லியன் மெற்றிக்தொன்னாக இது அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது அரிசியின் விலை 26 ரூபா வாக உள்ளதெனவும், அறுவடையின் பின்னர் அரிசியின் விலை 19 இல் இருந்து 21 வரை குறைவடையும் வாய்ப்பு இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

உள்நாட்டு நுகர்வில் மீதமானதாக இருக்கும் நெல்லை, இந்தோனேசியாவிற்கு 50 ஆயிரம் மெற்றிக் தொன்னும், சிங்கப்பூருக்கு 20 ஆயிரம் மெற்றிக்தொன்னும், பிறிமா ஆலைக்கு 30 ஆயிரம் மெற்றிக் தொன்னும் வழங்கப்படவுள்ளது எனவும் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்தார்.

பிறிமா ஆலைக்கு வழங்கப்படும் 30 ஆயிரம் தொன் நெல் - 11 ரூபாவுக்கு வழங்கப்பட இருப்பதாகவும், ஏனையோருக்கு 13 ரூபாவுக்கே வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர், பிறிமா ஆலைக்கு வழங்கப்படும் நெல்லுக்கு 2 ரூபா கழிவை அரசு வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# நடப்பு வருட வருமானமாக 304 பில்லியன் கிடைக்கும்

### திறைசேரி வட்டாரங்கள் மதிப்பீடு

இந்தவருட முடிவுக்குள் அரசுக்கு மொத்த வருமானமாக 304 மில்லியன்ரூபா கிடைக்குமென்று திறைசேரி வட்டாரங்களால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் 120 பில்லியன் ரூபா வற் வரி மூலம் இந்த வருடத்துக்குள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், கடந்த ஜூன் மாதம் வரை 47 பில்லியன் ரூபா வற் வரியாகக் கிடைத்துள்ளது. அதனால், இந்த வருடத்துக்குள் வற் வரியாக அறவிடப்படவேண்டியது 73 பில்லியன ரூபா எனவும், இதை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகளோடு கலந்துரையாடியதாகவும், அந்தக் கலந்துரையாடலில் வரி அறவிடுவதற்குரிய பிரச்சினைகள் பற்றியும், வரி கட்டாது தப்பிக்கொள்வோருக்கு எதிராக என்ன நடவடிக்கை என்பது பற்றியும் ஆராயப்படதாகவும் அறிவிக்கப்படுகிறது.

# தமிழ் - முஸ்லிம் மக்களை ஜனாதிபதி பிரிக்கமுயல்கிறார்

### செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

கிழக்கில் நடைபெறும் சில அசம்பாவிதங்களை வைத்து, தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும், பிரிக்க ஜனாதிபதி முயன்று வருகின்றார். இவ்வாறு அவர் செய்வாரானால், நாட்டில் இரத்த ஆறு ஓடுவதை எவராலும் தடுக்க முடியாமற்போகும் என, ரெலோ அமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இத்தகைய முயற்சிக்குத் தமிழ் மக்கள் ஒருபோதும் அனுமதி வழங்கப் போவதில்லை. தமிழ் மக்கள் இந்த நடவடிக்கையை எதிர்த்தே தீருவார்கள். ஜனாதிபதியின் முயற்சிக்கு எதிராக நாம் இரத்தம் சிந்தவும் தயங்கமாட்டோம் எனவும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

# வெளிநாட்டு வங்கிகளில் முடங்கிக்கிடக்கும் புலிகளின் பணத்தை விடுவிக்க கோரவில்லை

### அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள வங்கிக் கணக்குகலுள்ள பணத்தை - விடுதலைப் புலிகள் மீளப்பெறுவதில் காணப்படும் தடைகளைத் தளர்த்துமாறு, அரசாங்கம் ஒருபோதும் கோரவில்லை எனத் தொழில் அமைசசர் மகிந்த சமரசிங்க கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளைத் தடை செய்த நாடுகளில், விடுதலைப் புலிகள் வைத்திருந்த வங்கிக் கணக்குகளை மீளப்பெறுவதில் விதிக்கப்பட்டுள்ள தடைகளைத் தளர்த்துமாறு எந்தவொரு நாட்டிலும், அரசு வேண்டுகோள் விடுக்கவில்லை எனவும், அரசுக்கு அதற்கான தேவையும் ஏற்படவில்லை எனவும் அமைச்சர் அமரசிங்க குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளைத் தடை செய்த நாடுகள் - தங்களது நாட்டுச் சட்டத்துக்கு அமைவாகவே இந்த நடவடிக்கைகளை எடுத்திருப்பதால், அதுபற்றி அரசாங்கம் எதுவித வேண்டுகோளையும் விடுக்கத் தேவை ஏற்படவில்லை என அமைச்சர் மகிந்த சமரசிங்க குறிப்பிட்டார்.

ஜே.வி.பி. உறுப்பினர் விஜித ஹேரத் எழுப்பியிருந்த வாய்மூல வினா ஒன்றுக்கு விடை அளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

# வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு அமைச்சர் தலைமையில் நடவடிக்கை

வீதிப் போக்குவரத்தில் விபத்துக்கள் அதிகரிப்பதைத் தடுக்கும் நோக்கில், நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

அமைச்சர் திலக் மாரப்பன, சட்டமா அதிபர் ஆகியோர் இணைந்து இத்தீர் மானத்தை எடுத்துள்ளனர்.

இத்தீர்மானத்தில் - வாகன விபத்து ஏற்படுமாயின், தண்டப்பணத்தை அறவிடும்போது, அதன் தொகையை அதிகரிப்பதால், விபத்துக்குள்ளான வாகனச்சாரதியின் - சாரதி அனுமதிப்பத்திரத்தை இரத்துச்செய்தல், சாரதிக்கும், வாகன உரிமையாளருக்கும் சட்ட நடவடிக்கை எடுத்தல் என்பன இத்தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களாக உள்ளன.

# தொழில்நுட்ப கல்லூரியிலிருந்து சில பாடங்களை நீக்க முடிவு!

### மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் கபீர்காசிம்

(கொழும்பு)

தற்போதைய சூழ்நிலைக்கு உகந்ததல்ல என்று கருதப்படுகின்ற பாடங்களைத் தொழில்நுட்ப கல்லூரியிலிருந்து நீக்குவதற்குத் தீர்மானித்திருப்பதாக, மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் பயிற்சி அமைச்சர் கபீர் காசிம் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் சந்திரனெட்டி எழுதிய வாய்மூலக் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் சுருக்கெழுத்துக் கல்வியை அகற்றியிருப்பதாகவும், அதற்குப் பதிலாகக் கணினிக் கல்வியை அறிமுகப்படுத்தி இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### ஆங்கில தினப்போட்டி கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஆங்கில தினப்போட்டி - 2003 சம்பந்தமாக, கீழ்பிரிவு மற்றும் மேற்பிரிவு - குழுப்பாடல், நாடகப் போட்டிகளில் பங்குபற்றும் யாழ்.வலயப் பாடசாலைப் பொறுப்பாசிரியர்களுக்கும், ஆங்கிலப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்குமிடையிலான ஒரு முக்கிய கலந்துரையாடல் - எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நிகழுமென யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# வங்கிகளில் பெற்றுக்கொள்ளும் கடன்மூலம் மக்கள் வருமானத்தைப் பெருக்கவேண்டும்!

## விவசாயிகளுக்கு கடன்வழங்கும் வைபவத்தில் உரை

(உடுவில்)

வங்கிகள் மக்களுக்குக் கடன் வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தி மக்கள் தொழில் முயற்சியையும் வருமானத்தையும் பெருக்கிக்கொள்ள வேண்டுமென வடபிராந்திய ஹற்றன் நஷனல் வங்கியின் வடபகுதி சிரேஷ்ட முகாமையாளர் ச.சோதிலிங்கம் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் முந்திரிச் செய்கையை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு, ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளையினர்- பெரிய விளான் விவசாய சம்மேளனத்தைச் சேர்ந்த 21 முந்திரிகைச் செய்கையாளர்களுக்குக் கடன்வழங்கும் நிகழ்வை, கடந்த புதன்கிழமையன்று நடத்தினர். இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றும்போது -

கடந்த காலங்களில் இங்கு யுத்தம் நிலவியது. மக்கள் நிரந்தரமாக வாழமுடியாதிருந்தது. அதனால், வங்கிகளும் அவர்களுக்குக் கடன் வழங்கப் பயப்பட்டன. ஆனால், இப்பொழுது வங்கிகள் மக்களுக்குக் கடன் வழங்க முன்னிற்கின்றன. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, நீங்கள்- உங்கள் வருமானத்தை, தொழில் முயற்சிகளைப் பெருக்கிக்கொள்ள முன்வரவேண்டும்.

கடந்த வருடம் வீடு கட்டுவதற்கான கடன் 10.5 வீதமாக இருந்தது. அப்பொழுது மத்தியவங்கி, ஒவ்வொரு வங்கிகளுக்கும் 500 மில்லியன் ரூபா ஒதுக்கியிருந்தது. இப்பணம் மக்களால் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை.

தற்போது கடன்களுக்கான வட்டி 9.5 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் 17 மில்லியன் ரூபா விவசாயக் கடனாக இலங்கை முழுவதற்கும் வழங்கியுள்ளோம். இனி வருங்காலங்களில் அனைத்து தொழில் முயற்சியாளர்களுக்கும் கடன்வழங்கும் திட்டங்களைத் தயாரித்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

அங்கு, வங்கிமுகாமையாளர் சி.சுந்தரரேஸ்வரசர்மா - விவசாயிகளுக்கான விளக்கவுரையாற்றுகையில், ஒவ்வொரு வங்கிகளுக்கும் ஒவ்வொரு மகுடவாசகம் உண்டு. அதேபோல, எமது வங்கியும் 'உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி' என்ற வாசகத்தை அடிநாதமாகக் கொண்டு செயற்படுகின்றது. உங்களை முன்னேற்றும்வரை, நாம் உங்களின் நண்பனாகவும், பங்காளியாகவும் செயற்படுவோம். விவசாயிகளே எமது ஏணிப்படிகள். ஆரம்ப காலந்தொட்டு விவசாயத்திற்கு ஊக்கமளிப்பதனாலேயே அவர்கள் வளர்ச்சி பெற்றுள்ளனர்.

கடந்த வருடம் விவசாய சம்மேளனத்தின் உதவியுடன் 17 மில்லியன் ரூபாவை, காலபோகத்திற்கு 6 மாத கடன் அடிப்படையில் வழங்கினோம். அப்போது, மக்களின் நேர்மை பற்றி எமக்குச் சிறிது பயம் காணப்பட்டது. ஆனால், மக்கள் கண்ணியமாக நடந்துகொண்டமையால், இன்று பல்லாண்டுப் பயிர்களான வாழை, முந்திரிகை போன்றவற்றிற்கு 3 வருட கடனை வழங்குகிறோம். மேலும் உழவு இயந்திரம், நீர் இறைக்கும் இயந்திரம், தெளிகருவி, விலங்கு வேளாண்மை விவசாயக் கைத்தொழில் போன்றவற்றிற்கும் கடன்வழங்க ஆயத்தமாகவுள்ளோம். ஆனால், மக்கள் - வங்கிகளின் வளத்தைச் சரிவரப் பயன்படுத்துவதில்லை, எனவும் தெரிவித்தார்.

நாம் எதனையும் மூடுபொருளாக வைத்திருக்க விரும்பவில்லை. உங்கள் தேவைகள் எதுவாயிருந்தாலும், அவற்றை எம்முடன் கலந்தாலோசித்துப் பெறமுடியும். விவசாய வீடமைப்புக் கடன் - உயர்வருமானம் பெறுபவர்களுக்கே முன்னர் வழங்கப்பட்டது. ஆனால், முறைசாரா வருமானம் பெறுபவர்களும், 9.5 வீதத்தில் 15 வருடகாலத்தில் திருப்பிச் செலுத்தக்கூடியவாறு கடன் பெறலாம் என்றார்.

அங்கு வருகைதந்த விவசாயிகள் - பொருட்கள் சந்தைப்படுத்தலிலுள்ள பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிட்டபோது, காலப்போக்கில் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.




தீவக லயன்ஸ் கழகத்தினர் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று யாழ். அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் நடத்திய இலவச மருத்துவமுகாமில் கலந்துகொண்ட லயன்ஸ் கழக உறுப்பினர்களைப் படத்தில் காணலாம்.

## தபாலக வீதி ஒரு வழிப்பாதை

(யாழ்ப்பாணம்)

யாழ்.தபாலக வீதியை ஒரு வழிப்பாதையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென, யாழ். பொலிஸாரினால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

நகருக்குள் பிரவேசிக்கும் பாதையாக அதனைப் பாவிக்கும்படியும், இதன்மூலமாகப் போக்குவரத்து நெரிசல்களைக் குறைத்துக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, அனைத்து சாரதிகளும் - வரி அனுமதிப் பத்திரம், காப்புறுதி அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் என்பவற்றின் மூலப்பிரதியினையே தம்மோடு வைத்திருக்கவேண்டும் எனவும், நிழற்படப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

## மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு நெடுந்தீவில் உதவிப் பொருட்கள்!

### யு.என்.எச்.சி.ஆர் வழங்கியுள்ளது

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில்கடந்த வருடம் பெப்ரவரி 22 ஆம் திகதிக்குப் பின்னர் மீள்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு - யு.என். எச்.சி.ஆர். நிறுவனத்தினர், நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் வைத்து 67 குடும்பங்களுக்கு தலா 6000 ரூபா பெறுமதியான வீட்டுப்பாவனைப பொருட்கள் வழங்கியுள்ள னர்.

தமிழக அகதிமுகாம்கள் மற்றும் வன்னிப்பகுதி ஆகியவற்றிலிருந்து வந்து மீளவும் தற்போது குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கே இந்த உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(113)

## பெண்கள் விடுதி அமைக்க நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் - பெண்கள் சிகிச்சை விடுதி அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப்பெண்கள் சிகிச்சை நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கையினை, போரூட் நிறுவனம் மேற்கொள்ளவுள்ளது.

இதுவரை காலமும் பெண்கள் சிகிச்சைக் களம் அமைப்பதற்கு இடவசதி இன்மையால், மேற்படி பணிகள் இடம்பெற முடியாதநிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(17)

## வயோதிபர் மரணம்

கோப்பாயில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்து - யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வயோதிபர் ஒருவர், நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த தம்பு யோகராசா (வயது 79) என்னும் வயோதிபரே, பஸ் ஒன்றுடன் மோதுண்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு அங்கு சிகிச்சையளிக்கப்பட்டபோதும், சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு

## 1 இலட்சத்து 38 ஆயிரம் ரூபா அபராதமாகச் செலுத்த உத்தரவு

(யாழ்ப்பாணம்)

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றத்துக்காக 1 லட்சத்து 38 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணமாகச் செலுத்தும்படி, யாழ்.நீதிமன்றம் ஆறு பேருக்கு உத்தரவிட்டுள்ளது.

இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த - ஒருவருக்கு 60 ஆயிரம் ரூபாவும், ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் -அதேயிடத்தைச் சேர்ந்த இன்னுமொருவருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதமும்,

ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த ஒருவருக்கு 40 ஆயிரம் ரூபாவும், ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும், அத்தோடு மூன்று மாத கடூழியச் சிறைத்தண்டனையும்-

அரசடி வீதி கந்தர் மடத்தைச் சேர்ந்த ஒருவருக்கு 1000 ரூபா அபராதமும், காரைநகரைச் சேர்ந்த ஒருவருக்கு 500 ரூபாவும் - யாழ்ப்பாணம் நீதிமன்றத்தால் தண்டப்பணமாக விதிக்கப்பட்டது.

இதேவேளை, அனுமதியற்றுச் சாராயம் விற்றதற்காக, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கு 500 ரூபா தண்டப்பணமாக விதிக்கப்பட்டது.

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : ர.கோவர்த்தனி
முகவரி : சரசாலை வடக்கு, சாவகச்சேரி.

முதலாவது அகவையில்

பெயர் :இ.கம்ஷியன்
முகவரி : மீசாலை மேற்கு, மீசாலை.



முதலாவது அகவையில்



பெயர் : வி.பிரியங்கா
முகவரி :71, குருசோல்ற் வீதி, சுண்டுக்குளி.

ஒன்பதாவது அகவையில்

பெயர் : ம.சஞ்ஜயன்
முகவரி : நொத்தாரிஸ் வீதி, அரியாலை.



பத்தாவது அகவையில்



பெயர் : ம.சோபிதா
முகவரி :நொத்தாரிஸ் வீதி, அரியாலை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
------------------------
பெற்றார் ஒப்பம்

# புதிர் உலகம்

1. ஒரு எழுத்தாளருடைய சகோதரன், அவரிடம் நீ என் சகோதரன் இல்லை என்றார். ஏதனால்?

2. ஒரு வாத்து - நைல்நதியில் மிதந்து வந்து கொண்டு இருந்தது. அது எங்கிருந்து வந்தது?

3. மூன்று அடி நீளமும், நான்கு அடி அகலமும், ஐந்து அடி ஆழமும். உள்ள குழியில் எவ்வளவு கன அடி மணல் எடுக்கமுடியும்?

4. ஜப்பானியர்களைவிடச் சீனர்கள் அதிகம் அரிசி உபயோகிக்கிறார்கள். ஏன்?


5. எங்கள் வகுப்பிலுள்ள மாணவர்களில் கால்பந்து விளையாடுவோரின் எண்ணிக்கை 45, கிரிக்கெட் விளையாடுவோரின் எண்ணிக்கை 36, இரண்டும் விளையா டுபவர்களின் எண்ணிக்கை 15. அவ்வாறாயின், அவ் வகுப்பிலுள்ள மாணவர்கள் எத்தனை பேர்?

6. 37 என்ற எண்ணைப் பின்வரும் எண்களால் பெருக்குங்கள். அவ்வாறு பெருக்கிவரும் விடைகள் உங்களை ஆச்சரியப்படுத்தும். பெருக்கவேண்டிய எண்கள்? 3,6,9,12,15,18,21,24,27.

### விடைகள்

1. ஏனென்றால் அந்த எழுத்தாளர் அவனுடைய சகோதரர்.
2. முட்டையில் இருந்து.
3. குழியில் எப்படி மணல் இருக்கும்?
4. சீனாவில் மக்கள் தொகை அதிகம்.
5. (45+36) -15 = 66 பேர்.
6. 111, 222, 333, 444, 555, 666, 777, 888, 999.

## ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



விடைகள் ii ஆம் பக்கம்

# தகவல் களஞ்சியம்

உங்கள் நுண்ணறிவை நீங்களே மதிப்பிடுங்கள்

## சென்றவாரப் புதிர்களுக்கான விடைகள்

1. முதலில் 4 மாம்பழங்களை 3 ஆகப்பிரித்து பெறப்படும் 12 துண்டுகளைப் பங்கிடல். பின்னர், 3 மாம்பழங்களை 4 ஆகப் பிரித்தல், பெறப்படும் 12 துண்டுகளைப் பங்கிடல்.
2. நடந்து சென்றிருப்பேன்.
3. [diagram]
4. ஐந்து நிமிடங்கள்.
5. உழவன்.
6. [diagram]
7. 21 பேர்.
8. மழை பெய்யவில்லை.
9. [diagram]
10. ரூபா 400.

## இவ்வாரப் புதிர்கள்

**முயற்சியுங்கள்! முயற்சியுங்கள்! முயற்சித்துக் கொண்டேயிருங்கள்.**


1. அமைச்சர் ஒருவரது வீட்டு விருந்திற்கு - அரசனும், அரசியும் வந்திருந்தார்கள். அங்கே அவனது தங்கைக்கும் விருந்து வழங்க வேண்டியிருந்தது. ஆனால், மூன்றே மூன்று தங்கத்தட்டுக்களே அமைச்சரின் வீட்டில் இருந்தது. எப்படிப் பரிமாறி இருப்பார்?

2. ஒரு மாட்டின் தலை கிழக்குத் திசையைப் பார்த்து நிற்கும் போது, அம்மாட்டின் வால் எத்திசையைப் பார்த்து நிற்கும்?

3. உங்களிடம் மூன்று தீக்குச்சிகள் உள்ளன. எவற்றையும் வெட்டாமல் (தீக்குச்சிகளை), நான்கு என்ற இலக்கத்தைப்பெற முடியுமா?

4. மரத்தில் இருந்த கிளி ஒன்று - வானத்தில் கூட்டமாகப் பறந்த கிளிகளைப் பார்த்து - 'நூறு கிளி அக்கா, நூறு கிளி அக்கா எங்கே போகிறீர்கள்?' எனக் கேட்டது. இதற்குப் பறந்த வண்ணம் இருக்கும் கிளிகளில் ஒன்று - 'நாங்கள் நூறு அல்ல, நாங்களும் எங்களைப்போல் இன்னொரு பங்கும், எங்களில் பாதியும், பாதியில் பாதியும், நீயும் சேர்த்தால்தான் நூறு ஆகும்' என்றது. எனின், வானில் பறந்த கிளிகள் எத்தனை?

5. படத்தில் 12 தீக்குச்சிகள் மூலம் 3 சதுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் ஏதேனும் 3 தீக்குச்சிகளை மட்டும் மாற்றுவதன் மூலம், 5 சதுரங்களைப் பெறமுடியுமா?



விடைகள் அடுத்த வரம்.
P. உமாசங்கர்,
ஆசிரியர்,
நுண்ணறிவுத்துறை



# நீயாக முடிவுக்கு வராதே!



அரசன் ஒருவன் தன் நாட்டு அறிஞர் பெருமக்களை எல்லாம் போட்டி ஒன்றுக்கு வரவழைத்தான். எல்லோரும் வந்து கூடினார்கள். "எனக்கு ஒரு சிக்கல். உங்களில் யார் அதைத் தீர்த்து வைக்கின்றீர்கள், என்று பார்ப்போம்" என்று சொன்ன அரசன் - அவர்களை ஒரு பெரிய அறைக்கு அழைத்துச் சென்றான்.

"இதோ இந்த அறையின் ஒரு புறம் மூடியிருக்கிற கதவு தான், நம் நாட்டிலேயே மிகக் கனமானதும், பெரியதுமானதாகும். என்னால் அதைத்திறக்க முடியவில்லை. உங்களில் யாராவது, எந்த முறையையாவது கையாண்டு, அதைத் திறக்க முடியுமா? பாருங்கள்" என்றான். மிகப் பெரிய கதவினைப் பார்த்த உடனே பலர்- "எங்களால் இது முடியாது அரசே" என்றனர்.

மற்றும் சிலர் அந்தக் கதவின் அருகே சென்று, மேலும் கீழும் பார்த்து விட்டு, உதட்டைப் பிதுக்கியவாறு திரும்பினார்கள். ஆனால், ஒரே ஒருவன் மட்டும் முயற்சி செய்து, கதவைத்திறப்போம் என்ற எண்ணத்தில், அதில் கை வைத்துத் தள்ளினான். என்ன வியப்பு! கதவின் பின்புறம் தாழ்ப்பாள் போடாததால் கதவு திறந்துகொண்டது.


இதைக் கண்ட மற்றவர்கள் - நாம் முயற்சி செய்யாமல் விட்டுவிட்டோமே என்று நினைத்துத் தலை கவிழ்ந்தார்கள்.

அரசன்- அவர்களைப் பார்த்து, "நீங்களாக ஏதோ நினைத்துக்கொண்டு, உங்களால் முடியாது என்ற முடிவுக்கு வந்துவிட்டீர்கள். முயற்சி செய்தபின் முடிவுக்கு வருவதே அறிவுடைமை என்றான். கதவைத் திறந்த அறிஞனுக்குப் பரிசு கொடுத்து அனுப்பினான் அரசன்.

## உங்கள் கைவண்ணம்



பா. லதீபி
தரம் - 8
பெரியபுலம் மகா வித்தியாலயம்.



ர. தேனுகா,



# சிறுவர் அரங்கம்

## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

### உகண்டா

வாராந்தம் அறிந்து கொள்ளும் நாடுகள் வரிசையில் - இந்த வாரம் உகண்டா நாடு பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

| | | |
|---|---|---|
| தலைநகர் | - | கம்பாலா. |
| பரப்பளவு | - | 2 இலட்சத்து 36 ஆயிரம் சதுர கிலோ மீற்றர். |
| மொழி | - | ஆங்கிலம், உகண்டா, சுவாகிலி. |
| சமயம் | - | கிறிஸ்தவம், இஸ்லாம், பழங்குடி. |
| நாணயம் | - | உகண்டா ஷில்லிங். |
| ஆயுட்காலம் | - | சராசரி 40.7. |
| | | ஆண் 39.2 - பெண் 41.5. |



ஜொவேரி முசவெனி




கிழக்கு - மத்திய ஆபிரிக்காவில் மக்கள் நெருக்கமாக வாழ்கின்ற நாடு இதுவாகும். 1962 ஆம் ஆண்டு பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற்றது.


அண்மையில் மரணம் அடைந்த சர்வாதிகாரி 'இடி அமீனின்' ஆதிக்கத்தில் இருந்த நாடாக விளங்குகின்றது.

இந்த நாட்டில் செப்புப் படிமங்கள் அதிகம் நிறைந்துள்ளன. தேயிலை, வாழைப்பழம், கோப்பி, பருத்தி ஆகிய விவசாயப் பொருட்களின் உற்பத்தியும், கனிமம், செப்பு ஆகியவற்றின் உற்பத்தியும் முக்கிய உற்பத்திகளாக இடம்பெறுகின்றன.

## எத்தனை கத்திரிக்கோல்கள் உள்ளன?



# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- பு.ஜனார்த்தனன்
கற்கும் பாடசாலை :-
யாழ். மத்திய கல்லூரி
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
பொது அறிவு, விளையாட்டு, பத்திரிகை வாசித்தல்.



முழுப்பெயர் :- ஏ.பிரேமசந்திரன்
கற்கும் பாடசாலை :-
யாழ்ற்றன் கல்லூரி.
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, பத்திரிகை வாசித்தல்.



முழுப்பெயர் :- செ.சுஜிபன்
கற்கும் பாடசாலை :-
இணுவில் இந்துக் கல்லூரி.
கற்கும் தரம் :- 2
ஆர்வமுள்ள துறைகள் :-
கல்வித்துறை, தொலைக்காட்சி பார்த்தல்.



முழுப்பெயர் :- இ.சஸ்மிதா
கற்கும் பாடசாலை :-
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனம், வாசிப்பு, முத்திரை சேகரித்தல்.

முழுப்பெயர்:- ச.புவிதாஸ்
கற்கும் பாடசாலை :-
வல்வை. மகளிர் மகா வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல்,விளையாட்டு.

முழுப்பெயர்:- சு.லலிதாசன்
கற்கும் பாடசாலை :-
சேதுகாவலர் கனிஷ்ட வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, கிரிக்கெற், பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர்:- த.அகிலன்
கற்கும் பாடசாலை :-
யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரி
கற்கும் தரம் : 9
ஆர்வமுள்ள துறைகள் :-
சித்திரம், பொது அறிவு, தொலைக்காட்சி பார்த்தல், வானொலி கேட்டல்.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
:..............................

.................. திகதி .............................. ஒப்பம்

.................. அதிபர்/ஆசிரியர் ஒப்பம் .................. பெற்றோர் ஒப்பம்

# உங்களுக்குத் தெரியுமா?

சிங்கம், புலி போன்ற மிருகங்களின் குடும்பத்தின் கடைக்குட்டிதான் நம் பூனையார். இதற்கும் வேட்டைக் குணம் உண்டு. அதுகவீர பூனை - தன் முகத்தில் காணப்படும் மீசையின் உதவி கொண்டுதான், அது தான் போகும் வழியை அறிந்துகொள்கிறது.

விந்தியாசங்களுக்கான விடைகள்: 1. ஒட்டகத்தின் வால், 2.கால் குளம்பு, 3.தொப்பி, 4.உறிஞ்சி, 5.சூரியனின் கதிர்கள்.





# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளல் 2003

## மீளளிப்பு நடைமுறைகள்.

1.கடன் சான்றிதழாளர் நேரடியாக வருகைதந்து கடனை மீளப்பெற வேண்டும்.
2.ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச் செலுத்தியிருப்பின் இருவரும் வருகைதர வேண்டும்.
3.கடன் சான்றிதழாளர் இறந்திருப்பின் பின்வரும் ஆவணங்களைப் பின்னுரித்தாளர் கொண்டு வரவேண்டும்
★ இறப்புச் சான்றிதழ்
★ இறப்புச் சான்றிதழின் படி (பிரதி)
★ கடன் சான்றிதழ்
★ பின்னுரித்தாளரின் அடையாள ஆவணம்
★ பின்னுரித்தாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவையாளரின் கடிதம்
4.கடன் சான்றிதழிலுள்ள முழுப்பெயரும் அடையாள ஆவணத்திலுள்ள முழுப்பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென்பதை உறுதிப்படுத்தி கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.
5.அ)மீளளிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் சான்றிதழாளர் தமது அடையாள ஆவணத்தைக் காண்பித்தே கடனை மீளப்பெற முடியும்.
ஆ)அடையாள ஆவணம் அற்றவர் தமது புகைப்படத்தின் (2.5அங்.2.0அங். அளவு) பின்புறத்தில் தமது பெயர், முகவரி, கையொப்பம் ஆகியவற்றை உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும்.

*(நேற்றைய தொடர்ச்சி)*

### தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பிரிவு

48.)யா/தெ/2156 திரு.நாகராசா சிவபாதசுந்தரம்
49.)யா/தெ/2164 திரு.அம்பலவாணர் பாலச்சந்திரன்
50.)யா/தெ/2195 திரு.தம்பிஐயா சின்னத்துரை
51.)யா/தெ/2199 செல்வி.விஜயலக்சுமி இரத்தினம்
52.)யா/தெ/2247 திரு.தம்பிப்பிள்ளை செல்லத்துரை
53.)யா/தெ/2258 திருமதி.ஜெகதாம்பிகை சத்தியசீலன்
54.)யா/தெ/2415 திரு.சுப்பையா பஞ்சரத்தினம்
55.)யா/தெ/2439 திரு.முருகையா நவரட்ணம்
56.)யா/தெ/2496 திரு.முத்தையா தேவராஜா
57.)யா/தெ/2502 திரு.வல்லிபுரம் திருச்செல்வம்
58.)யா/தெ/2537 திருமதி.பூரணம் முருகையா
59.)யா/தெ/2559 திரு.பொன்னுத்துரை பால்சுப்பிரமணியம்
60.)யா/தெ/2592 திரு.வேலுப்பிள்ளை அமரசிங்கம்
61.)யா/தெ/2642 திருமதி.இந்திராணி பத்மநாதன்
62.)யா/தெ/2666 திரு.முத்துத்தம்பி குணரத்தினம்
63.)யா/தெ/2679 செல்வி.விஜயமாலா கதிரிப்பிள்ளை
64.)யா/தெ/2749 திருமதி.இராசம்மா இரத்தினம்
65.)யா/தெ/2797 திருமதி.மகேஸ்வரி நடராசா
66.)யா/தெ/2800 திரு.விஸ்வலிங்கம் திருலிங்கேஸ்வரன்
67.)யா/தெ/2842 திரு.மனுவேற்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை
68.)யா/தெ/2845 திருமதி.மீனகாந்தி பாலகிருஷ்ணன்
69.)யா/தெ/2872 திரு.வேலுப்பிள்ளை தம்பு நடராசா
70.)யா/தெ/2892 திருமதி.கீதா சிறீஸ்கந்தா
71.)யா/தெ/2893 திருமதி.அன்னலட்சுமி விக்கினேஸ்வரன்
72.)யா/தெ/2954 திருமதி.மங்களேஸ்வரி விமலானந்தராசா
73.)யா/தெ/2992 திரு.சின்னத்தம்பி நல்லதம்பி
74.)யா/தெ/3007 திரு.பொன்னுத்துரை பாலகுமார்
75.)யா/தெ/3008 திரு.இராயப்பு அந்தோனிப்பிள்ளை
76.)யா/தெ/3056 செல்வி.மொய்றா ஜயந்தினி சந்தியாகோ
77.)யா/தெ/3081 திரு.அருளம்பலம் நீதிரஞ்சன்
78.)யா/தெ/3084 திரு.வன்னித்தம்பி புஸ்பதேவன்
79.)யா/தெ/3114 திருமதி.தெய்வரதி கணேசலிங்கம்
80.)யா/தெ/3137 திரு.மயில்வாகனம் லோகேஸ்வரன்
81.)யா/தெ/3141 திரு.கதிர்காமு சிவானந்தம்
82.)யா/தெ/3157 திருமதி.பரமேஸ்வரி கந்தையா
83.)யா/தெ/3158 திரு.கந்தையா உருத்திரசேனன்
84.)யா/தெ/3176 திரு.நமசிவாயம் பாலச்சந்திரன்
85.)யா/தெ/3178 திரு.நாகலிங்கம் ஜெயசீலன்
86.)யா/தெ/3261 திருமதி.வசந்தாதேவி பத்மநாதன்
87.)யா/தெ/3270 திரு.வல்லிபுரம் குமாரசாமி
88.)யா/தெ/3274 திருமதி.கமலாதேவி சிறிஸ்கந்தராசா
89.)யா/தெ/3298 திரு.வன்னித்தம்பி வயிரவப்பிள்ளை
90.)யா/தெ/3331 திருமதி.பரமேஸ்வரி விஸ்வலிங்கம்
91.)யா/தெ/3391 திரு.பொன்னர் சின்னத்துரை
92.)யா/தெ/3397 திரு.கந்தையா சிவராசா
93.)யா/தெ/3468 திருமதி.புஸ்பராணி டெலான்சா
94.)யா/தெ/3569 திரு.சண்முகராஜா ஜெகதீஸ்வராஜா
95.)யா/தெ/3591 திரு.அரியகுட்டி குகேஸ்வரன்
96.)யா/தெ/3594 செல்வி.சோதிமதி பொன்னையா
97.)யா/தெ/3696 செல்வி.நாகரஞ்சனி செல்லையா
98.)யா/தெ/3722 திரு.நாகமுத்து கந்தையா
99.)யா/தெ/3740 திரு.பொன்னுத்துரை உருத்திராபதி
100.)யா/தெ/3760 செல்வி.திருஅருட்செல்வி தவவேந்திரன்
101.)யா/தெ/3802 திரு.செல்லத்துரை மகாலிங்கம்
102.)யா/தெ/3848 திருமதி.பிள்ளையம்மா சிவலிங்கம்
103.)யா/தெ/3917 திரு.சுப்பையா சிவலிங்கம்
104.)யா/தெ/3934 திருமதி.சறோஜினிதேவி சிவபுத்திரன்
105.)யா/தெ/3966 திரு.ஐயாத்துரை சிங்கராசா
106.)யா/தெ/3969 திரு.கந்தப்பிள்ளை செல்வநாயகம்
107.)யா/தெ/3983 திருமதி.செல்லம்மா இரத்தினசிங்கம்
108.)யா/தெ/4247 திருமதி.பாலயோகினி சண்முகநாதன்
109.)யா/தெ/4281 திரு.இரத்தினம் துரைச்சாமி
110.)யா/தெ/4397 திரு.சித்தர் சிதம்பரம்
111.)யா/தெ/4411 திருமதி.தாயீஸ்குணலீலா அருளானந்தம்
112.)யா/தெ/4442 திரு.தாமன் சின்னத்தம்பி
113.)யா/தெ/4451 திரு.சின்னத்தம்பி சுத்தானந்தம்

### கிளிநொச்சி மாவட்டம்

01.)வ/கி/43 திருமதி.புஸ்பமலர் இராசேந்திரலிங்கம்
02.)வ/கி/84 திருமதி.பூமணி தம்பிஐயா
03.)வ/கி/188 திரு.கந்தையா சர்வேஸ்வரன்
04.)வ/கி/234 திருமதி.துவாரகாதேவி வல்லிபுரம்
05.)வ/கி/376 திரு.சின்னத்தம்பி சரவணமுத்து
06.)வ/கி/405 திரு.தம்பிப்பிள்ளை தியாகராசா
07.)வ/கி/426 திரு.வல்லிபுரம் குலசேகரம்பிள்ளை
08.)வ/கி/488 திரு.செல்லப்பா சற்குருநாதன்
09.)வ/கி/505 திரு.செல்லையா பிரேமராஜா
10.)வ/கி/515 திரு.சபாபதி நடராசா
11.)வ/கி/610 திரு.விஸ்வநாதன் இராசசுந்தரம்
12.)வ/கி/631 திரு.தம்பிப்பிள்ளை உதயகுமார்
13.)வ/கி/636 திரு.கணபதிப்பிள்ளை ஆறுமுகம்
14.)வ/கி/655 திருமதி.சிரோன்மணி சின்னத்தம்பி
15.)வ/கி/666 திருமதி.யோகேஸ்வரி மகேந்திரன்
16.)வ/கி/689 திரு.சூசைப்பிள்ளை றெமீந்திரன் அமலன்சேய்
17.)வ/கி/695 திரு.நாராயணபிள்ளை நவரத்தினம்
18.)வ/கி/722 திரு.சின்னையா சின்னத்தம்பி
19.)வ/கி/757 திரு.முருகேசு சுப்பிரமணியம்
20.)வ/கி/789 திரு.தம்பையா குகதாசன்
21.)வ/கி/836 திருமதி.இரத்தினம் சபாரஞ்சிதன்
22.)வ/கி/852 திரு.சேதுபதி ஜீவரத்தினம்
23.)வ/கி/888 திரு.கந்தையா நாகலிங்கம்
24.)வ/கி/916 திரு.பொன்னையா முருகுப்பிள்ளை
25.)வ/கி/960 திரு.நடராசா நகுலேஸ்வரன்
26.)வ/கி/992 திரு.தம்பிமுத்து ஞானேஸ்வரன்
27.)வ/கி/1099 திருமதி.புஸ்பராணி அம்பலவாணர் (அருளம்பலம்)
28.)வ/கி/1191 திருமதி.சந்திரமதி கணபதிப்பிள்ளை
29.)வ/கி/1222 திரு.சிற்றம்பலம் சிவசுப்பிரமணியம்
30.)வ/கி/1259 திரு.இராசையா சிவராசா
31.)வ/கி/1274 திரு.இராமுப்பிள்ளை தேவராசா
32.)வ/கி/1330 திரு.கந்தசாமி சிவலோகநாதன்
33.)வ/கி/1354 திரு.முருகையா தனபாலன்
34.)வ/கி/1360 திரு.குப்புசாமி நாகராசா
35.)வ/கி/1362 திரு.செல்வரத்தினம் குமாரகுலம்
36.)வ/கி/1529 திரு.இராமநாதர் நாகேந்திரம்
37.)வ/கி/1554 திரு.இருளாண்டி இராசசந்திரன்
38.)வ/கி/1572 திரு.சிதம்பரப்பிள்ளை பூசைமாணிக்கம்
39.)வ/கி/1695 திரு.குமாரசாமி சிவசிதம்பரம்
40.)வ/கி/1714 திரு.தம்பையா அன்னலிங்கம்
41.)வ/கி/1789 திரு.கிருஷ்ணசாமி கிருஷ்ணகுமார்
42.)வ/கி/1816 திரு.கார்த்திகேசு பேரின்பவேலுப்பிள்ளை
43.)வ/கி/1856 திரு.தம்பிப்பிள்ளை சிவகுமாரன்
44.)வ/கி/1862 திரு.மாணிக்கம் சிவபாலன்
45.)வ/கி/1875 திருமதி.நாகரத்தினம் சோமசுந்தரம்
46.)வ/கி/1949 திருமதி.மகேஸ்வரி குமாரசாமி
47.)வ/கி/2153 திரு.சண்முகம் நாகலிங்கம்
48.)வ/கி/2157 திரு.முத்தர் சின்னத்தம்பி
49.)வ/கி/2177 திரு.வல்லிபுரம் கணேசு
50.)வ/கி/2179 திரு.சிவலிங்கம் செல்வரத்தினம்
51.)வ/கி/2224 திரு.பொன்னுத்துரை துரைசிங்கம்
52.)வ/கி/2333 திரு.கனகரெத்தினம் அமுதராசா
53.)வ/கி/2381 திரு.செல்லத்துரை சண்முகநாதன்
54.)வ/கி/2407 திரு.மரியாம்பிள்ளை அன்ரன் இராசநாதன்
55.)வ/கி/2435 திரு.சொக்கலிங்கம் கதிரேசு
56.)வ/கி/2448 திரு.வேலுப்பிள்ளை தெய்வவேற்பரமநாதன்
57.)வ/கி/2459 திரு.மயில்வாகனம் சந்திரகுமார்
58.)வ/கி/2572 திரு.வேலுப்பிள்ளை முருகேசு
59.)வ/கி/2604 திருமதி.குலானந்தவதி நித்தியானந்தராசா
60.)வ/கி/2643 திரு.சுப்பிரமணியம் விஜயரத்தினம்
61.)வ/கி/2659 திரு.கணபதிப்பிள்ளை நித்தியானந்தராசா
62.)வ/கி/2706 திரு.செல்லர் இராசு
63.)வ/கி/2716 திரு.தோமாஸ் ஸ்ராலின்
64.)வ/கி/2720 திருமதி.பகவதிப்பிள்ளை திருநாவுக்கரசு
65.)வ/கி/2737 திரு.வல்லிபுரம் துரைராசா
66.)வ/கி/2751 திரு.மயில்வாகனம் தர்மலிங்கம்
67.)வ/கி/2783 திரு.கந்தையா சின்னத்துரை
68.)வ/கி/2816 திரு.பொன்னையா தேவராசா
69.)வ/கி/2858 திரு.மார்க்கண்டு குலத்துங்கம்
70.)வ/கி/2878 திரு.சின்னத்தம்பி தவராசா
71.)வ/கி/2896 திரு.ஞானப்பிரகாசம் சிவலிங்கம்
72.)வ/கி/3013 திரு.பொன்னையா முருகையா
73.)வ/கி/3053 திரு.சதாசிவம் அருட்பிரகாசம்
74.)வ/கி/3057 திருமதி.நாகேஸ்வரி அருணாசலம்
75.)வ/கி/3071 திரு.பிலிப்புப்பிள்ளை மரியதாசன்
76.)வ/கி/3080 திரு.கணபதி இராசேந்திரம்
77.)வ/கி/3110 திரு.கணபதி செல்லத்துரை
78.)வ/கி/3165 திரு.சின்னத்தம்பி கிருஷ்ணதாசன்
79.)வ/கி/3168 திரு.சோமசுந்தரம் பாக்கியநாதன்
80.)வ/கி/3205 திரு.ஞானமுத்து அலன்றோஸ்
81.)வ/கி/3303 திரு.சதாசிவன் சற்குணநாதன்
82.)வ/கி/3314 திரு.ஆண்டி வேலும்மயிலும்
83.)வ/கி/3372 திரு.நாகலிங்கம் பேரம்பலம்
84.)வ/கி/3421 திருமதி.இரத்தினேஸ்வரி பாலகிருஸ்ணன்
85.)வ/கி/3482 திரு.வல்லிபுரம் தாமு
86.)வ/கி/3556 திரு.பொன்னையா ஜேசுரட்ணம்

### மன்னார் மாவட்டம்

01.)ம/18 திரு.லோறன்ஸ் பரராசசிங்கம்
02.)ம/233 திரு.சந்தியோகு மரியநாயகம் பர்ணாந்து
03.)ம/302 திரு.இராமசேது பொன்னம்பலம்
04.)ம/322 திரு.அவுரார் மரியதாசன்
05.)ம/345 திரு.இலங்கநாதர் அருளானந்தம்
06.)ம/399 திருமதி.தவமணி கதிரவேலு
07.)ம/422 திரு.வீரகத்தி கமலேஸ்வரன்
08.)ம/444 திரு.பசுபதி சிவசுப்பிரமணியம்
09.)ம/487 திரு.சவிரி பீற்றர்
10.)ம/517 திரு.அமிர்தநாதன் தேவராசன்
11.)ம/557 திரு.அஹறாம்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை
12.)ம/579 திரு.அலக்சான்டர் வின்சன்குருஸ்
13.)ம/582 திரு.மருசால் தானியேல் அரியரெட்ணம்
14.)ம/650 திரு.சுப்பன் மகேஸ்வரன்
15.)ம/654 திரு.பர்ணாந்து சந்தியோகு
16.)ம/713 திரு.வயிரமுத்து ராசதுரை
17.)ம/719 திரு.சவேரியான் பீற்றர்
18.)ம/758 திரு.வரப்பிரகாசம் தேவதாசன்
19.)ம/770 திரு.கதிர்காமு பரதராசன்

### சங்கானை உதவி அரச அதிபர் பிரிவு

01.)யா/ச/31 திருமதி.வசந்தி செல்வநாதன்
02.)யா/ச/59 திருமதி.றூபி முத்துராஜா
03.)யா/ச/79 திரு.கந்தையா கந்தசாமி
04.)யா/ச/101 திரு.வயிரமுத்து கிருஷ்ணதாசன்
05.)யா/ச/149 திருமதி.சுசீலாதேவி ஜெயபாலன்
06.)யா/ச/158 திரு.செல்லையா கனகரத்தினம்
07.)யா/ச/232 திரு.தம்பிப்பிள்ளை இராசதுரை
08.)யா/ச/249 திரு.நாகன் செல்வம்
09.)யா/ச/371 திரு.மூத்ததம்பி ஜெயச்சந்திரன்
10.)யா/ச/419 திருமதி.பாக்கியம் ஞானப்பிரகாசம்
11.)யா/ச/489 திருமதி.சறோஜினிதேவி பரமானந்தன்
12.)யா/ச/514 திரு.சுப்பன் தனராசா
13.)யா/ச/521 திரு.பொன்னுச்சாமி மகேந்திரன்
14.)யா/ச/576 திரு.பொன்னர் கணேசன்
15.)யா/ச/629 திருமதி.நாகேஸ்வரி லிங்கலிங்கம்
16.)யா/ச/663 திரு.பிள்ளையான் கனகரெட்ணம்
17.)யா/ச/679 திரு.அம்பலம் தர்மலிங்கம்
18.)யா/ச/689 திரு.சிவமயம் ஸ்கந்தமயம்
19.)யா/ச/707 திரு.முருகேசு விருத்தாசலம்
20.)யா/ச/727 திரு.சரவணமுத்து மகேஸ்வரன்
21.)யா/ச/778 திருமதி.புவனராணி இராசையா
22.)யா/ச/966 திரு.கணபதிப்பிள்ளை பாலசிங்கம்
23.)யா/ச/1009 திரு.சிற்றம்பலம் இராசரத்தினம்
24.)யா/ச/1053 திரு.முருகேசு சின்னத்தம்பி
25.)யா/ச/1083 திரு.நடராசா செல்வராசா
26.)யா/ச/1105 திரு.நடராசா செல்வராசா
27.)யா/ச/1118 திருமதி.புஸ்பராணி கனகலிங்கம்
28.)யா/ச/1250 திரு.சதாசிவம் செல்வராசா
29.)யா/ச/1306 திருமதி.சறோஜினிதேவி ஸ்ரீபாலச்சந்திரன்
30.)யா/ச/1369 திருமதி.தவமணி நடராசா
31.)யா/ச/1389 திரு.முத்துத்தம்பி யோககுமார்
32.)யா/ச/1421 திருமதி.திருமணிச்செல்வி பரமன்
33.)யா/ச/1424 திருமதி.சடாட்சரதேவி லோகநாதன்
34.)யா/ச/1428 திரு.அருணாசலம் இராமநாதன்
35.)யா/ச/1429 திரு.மாணிக்கம் இராசலிங்கம்
36.)யா/ச/1559 திரு.அழகரத்தினம் சரவணபவன்
37.)யா/ச/1560 திருமதி.புவனஜோதி கதிரமலைநாதன்
38.)யா/ச/1647 திரு.கதிரவேல் அம்பலவாணர்
39.)யா/ச/1726 திரு.சபாநாயகம் இரத்தினராசா
40.)யா/ச/1763 திரு.கிருஸ்ணர் சுப்பிரமணியம்
41.)யா/ச/1768 திரு.கந்தையா சரவணபவானந்தன்
42.)யா/ச/1792 திருமதி.கோகிலாம்பாள் பிரகலாதன்
43.)யா/ச/1819 திருமதி.தெய்வநாயகி நாகராசா
44.)யா/ச/1858 திரு.ஆறுமுகம் குணரத்தினம்
45.)யா/ச/1885 திரு.முருகேசு குமாரவேலு
46.)யா/ச/1889 திருமதி.தவமணிதேவி கிருஷ்ணபிள்ளை
47.)யா/ச/1935 திரு.கதிரவேலு கந்தையா
48.)யா/ச/1972 திரு.முருகேசு செல்வராசா
49.)யா/ச/2091 திரு.கந்தன் நாகமுத்து
50.)யா/ச/2168 திரு.இராமலிங்கம் விஸ்வநாதன்
51.)யா/ச/2281 திரு. கிருஷ்ணர் சித்திவினாயகம்
52.)யா/ச/2333 திருமதி. நிர்மலாதேவி இராமையா
53.)யா/ச/2393 திரு.செல்லையா செல்வநாயகம்
54.)யா/ச/2394 திரு.ஆசைப்பிள்ளை வேலுப்பிள்ளை
55.)யா/ச/2414 திரு.கனகசபாபதி செல்வராசா
56.)யா/ச/2546 திரு.வேலுப்பிள்ளை சிவானந்தன்
57.)யா/ச/2629 திரு.பாலு பரமசிவம்
58.)யா/ச/2676 திருமதி.அன்னலட்சுமி நடராசா
59.)யா/ச/2684 திருமதி.சரஸ்வதி முருகேசு
60.)யா/ச/2712 திருமதி.சிவபாக்கியம் நாகராசா
61.)யா/ச/2715 திருமதி.ஈஸ்வரி பாலேந்திரன்
62.)யா/ச/2745 திரு.கார்த்தியேசு இராசதுரை
63.)யா/ச/2761 திருமதி.ஈஸ்வரியம்மாள் பாலசுப்பிரமணியம்
64.)யா/ச/2786 திருமதி.இலங்கேஸ்வரி சிவகுரு
65.)யா/ச/2832 திரு.சின்னவி சரவணமுத்து
66.)யா/ச/2833 திருமதி.இராசமணி சொக்கலிங்கம்
67.)யா/ச/2907 திருமதி.மனோன்மணி அப்பாத்துரை
68.)யா/ச/2969 திருமதி.கலாநாயகி நந்தகுமார்
69.)யா/ச/2973 திரு.சதாசிவம் இரத்தினசபாபதி
70.)யா/ச/3023 திருமதி.மலர் மீனேஸ்வரன்
71.)யா/ச/3043 திருமதி.நாகம்மா தம்பிராசா
72.)யா/ச/3082 திரு.வன்னியன் நாகலிங்கம்
73.)யா/ச/3097 திருமதி.கனகம்மா பொன்னையா
74.)யா/ச/3118 திருமதி.திருஞானசவுந்தரி தவேந்திரநாதன்
75.)யா/ச/3119 திரு.சம்பந்தர் நாகரத்தினம்
76.)யா/ச/3160 திருமதி.சாருகேசி சிவகந்தராசன்
77.)யா/ச/3319 திரு.சீனிவாசகம் வைரமுத்து
78.)யா/ச/3334 திரு.இராசரத்தினம் சிறீரஞ்சன்
79.)யா/ச/3343 திருமதி.அருட்கலைவாணி இராசையா
80.)யா/ச/3366 திருமதி.மங்கையர்க்கரசி இரத்தினவடிவேல்
81.)யா/ச/3391 செல்வி.திலகவதி ஆறுமுகம்
82.)யா/ச/3440 திருமதி.தனலட்சுமியம்மா காசிப்பிள்ளை
83.)யா/ச/3498 திருமதி.ஜெயராணி மகேஸ்வரன்
84.)யா/ச/3506 திரு.செல்லத்துரை சிவசுப்பிரமணியம்
85.)யா/ச/3532 திருமதி.வியாளாச்சி இளையதம்பி
86.)யா/ச/3618 திரு.முருகர் மாணிக்கம்
87.)யா/ச/3711 செல்வன்.குணரத்தினம் சுதர்சனன்
88.)யா/ச/3718 திரு.பொன்னம்பலம் நடேஸ்வரன்
89.)யா/ச/3739 திருமதி.பவளம்மா தேவராஜா
90.)யா/ச/3773 திரு.கந்தையா ஞானசேகரம்
91.)யா/ச/3774 திரு.மாணிக்கம் நாகேசு

(பக்கம் 08 இல் மிகுதி..)

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளல் 2003

பக்கம் 07 இன் தொடர்ச்சி

92.) யா/ச/3859 திரு.சின்னத்துரை மகேந்திரன்
93.) யா/ச/3883 திரு.சிவப்பிரகாசம் குபேரன்
94.) யா/ச/3894 திரு.வயித்திலிங்கம் ஸ்கந்தராசா
95.) யா/ச/3954 திரு.முத்துக்குமாரு குமாரசாமி
96.) யா/ச/3959 திரு.குமாரசிங்கம் குகதாசன்
97.) யா/ச/4046 திரு.சபாபதிப்பிள்ளை றங்கநாதன்
98.) யா/ச/4069 திரு.ஞானரனந்தராஜா தேவஞானன்
99.) யா/ச/4110 திரு.நடராசா மகேந்திரராசா
100.) யா/ச/4164 திரு.வயிரவனாதர் முருகேசு செல்லத்துரை
101.) யா/ச/4172 திரு.சுப்பிரமணியம் குணரத்தினம்
102.) யா/ச/4192 திரு.சின்னத்துரை இன்பராசா
103.) யா/ச/4294 திருமதி.தங்கம்மா சிதம்பரப்பிள்ளை
104.) யா/ச/4296 திருமதி.செல்வராணி கிருஷ்ணமூர்த்தி
105.) யா/ச/4332 திரு.வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்
106.) யா/ச/4344 திரு.முருகேசு கிருஷ்ணமூர்த்தி
107.) யா/ச/4352 செல்வி.தயாளினி இராஜநாயகம்
108.) யா/ச/4370 திரு.பரராசசிங்கம் தங்கவேல்
109.) யா/ச/4373 திரு.நடராஜா தேவராஜா
110.) யா/ச/4397 திரு.கனகரத்தினம் பிரபாகரன்
111.) யா/ச/4420 திருமதி.இரத்தினேஸ்வரி ராஜா
112.) யா/ச/4488 திரு.முருகுப்பிள்ளை விக்னேஸ்வரநாதன்
113.) யா/ச/4496 திருமதி.மலர்மாமணியம்மா இராசதுரை
114.) யா/ச/4522 திருமதி.டுவதி சிதம்பரப்பிள்ளை
115.) யா/ச/4546 செல்வி.சந்திரராணி பொன்னுத்துரை
116.) யா/ச/4560 திருமதி.பூலோகநாயகி பேரானந்தசிவம்
117.) யா/ச/4649 திருமதி.புனிதவதி மகாலிங்கம்
118.) யா/ச/6800 திரு.சுப்பர் பஞ்சாட்சரம்

### காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு

01.) யா/கா/37 திரு.வேலுப்பிள்ளை சண்முகராசா
02.) யா/கா/150 திரு.தாமோதரம்பிள்ளை சிவபாதசுந்தரம்
03.) யா/கா/193 திரு.வேலுப்பிள்ளை தர்மரத்தினம்
04.) யா/கா/194 திருமதி.தர்மதேவி யோகநாதன்
05.) யா/கா/282 திருமதி.தங்கம்மா கணபதிப்பிள்ளை
06.) யா/கா/360 திரு.கதிரவேலு கந்தசாமி
07.) யா/கா/362 திரு.கந்தையா சுப்பிரமணியம்
08.) யா/கா/442 திருமதி.தவமணி மாணிக்கவாசகர்
09.) யா/கா/471 திருமதி.தனலட்சுமி சிதம்பரநாதன்
10.) யா/கா/494 திரு.குமாரவேலுப்பிள்ளை குலசிங்கம்
11.) யா/கா/547 திரு.காசிநாதன் பாலசுப்பிரமணியம்
12.) யா/கா/555 திரு.சுந்தரமூர்த்தி அருணகிரிநாதன்
13.) யா/கா/559 திரு.பொன்னம்பலம் ஆறுமுகம்
14.) யா/கா/650 திருமதி.மகேஸ்வரி ஞானசம்பந்தசர்மா
15.) யா/கா/716 திரு.கந்தையா குகபரன்
16.) யா/கா/765 திருமதி.அமிர்தவல்லி தேவராசா
17.) யா/கா/768 திரு.கதிர்காமு இரத்தினம்
18.) யா/கா/774 திருமதி.பாக்கியம் ஐயம்பிள்ளை
19.) யா/கா/794 திருமதி.பரமேஸ்வரி சண்முகநாதன்
20.) யா/கா/807 திருமதி.ஞானேஸ்வரி தவரத்தினராசா
21.) யா/கா/858 திருமதி.பிறேமறாஜினி சபாநாதன்
22.) யா/கா/865 திரு.இராசையா குணசேகரம்
23.) யா/கா/940 திரு.நல்லதம்பி சுப்பிரமணியம்
24.) யா/கா/984 திருமதி.ரதிதேவி சபாநாயகம்
25.) யா/கா/991 திருமதி.புஸ்பமலர் வைத்தியநாதன்
26.) யா/கா/1012 திரு.செல்லையா சிவஞானசுந்தரம்

### வேலணை உதவி அரச அதிபர் பிரிவு

01.) யா/வே/9 திரு.வைத்திலிங்கம் சிவராஜா
02.) யா/வே/164 திரு.பொன்னுத்துரை தியாகமணி
03.) யா/வே/207 திரு.ஐயாத்துரை பார்த்திபன்
04.) யா/வே/225 திரு.கந்தையா இரட்ணசிங்கம்
05.) யா/வே/289 திருமதி.தனபாலதேவி பாலச்சந்திரன்
06.) யா/வே/292 செல்வன்.மனோகரன் தரணீகரன்
07.) யா/வே/375 செல்வி.சாவித்திரிதேவி விநாசித்தம்பி
08.) யா/வே/449 திரு.சோமநாதி சின்னையா
09.) யா/வே/476 திருமதி.சற்குணராணி பாலகிருஸ்ணன்
10.) யா/வே/544 திருமதி.இந்திராதேவி சுந்தரலிங்கம்
11.) யா/வே/578 திரு.அம்பலவாணர் வைரமுத்து
12.) யா/வே/727 திரு.கந்தையாபிள்ளை கனகசுந்தரம்
13.) யா/வே/822 திருமதி.திலகவதி பரநிருபசிங்கம்
14.) யா/வே/848 திருமதி.பரிமளாதேவி குகானந்தவேலு
15.) யா/வே/864 திரு.முத்துக்குமாரு ஆறுமுகம்
16.) யா/வே/904 திரு.மயில்வாகனம் துரைராசா
17.) யா/வே/986 திருமதி.மகேஸ்வரி மயில்வாகனம்
18.) யா/வே/1030 திரு.மதியாபரணம் லோகநாதன்
19.) யா/வே/1046 செல்வி.ஜெயந்தி கனகரத்தினம்
20.) யா/வே/1091 திருமதி.நாகேஸ்வரி சங்கரலிங்கம்
21.) யா/வே/1104 திரு.முத்தையா விஜயரட்ணம்
22.) யா/வே/1119 திரு.தியாகராசா பாலச்சந்திரன்
23.) யா/வே/1122 திரு.பசுபதிப்பிள்ளை நடராசா
24.) யா/வே/1147 திரு.விசுவலிங்கம் செல்வராசன்
25.) யா/வே/1185 திருமதி. மகாலட்சுமி கோபாலபிள்ளை
26.) யா/வே/1212 திரு.இரத்தினசபாபதி சுந்தரலிங்கம்
27.) யா/வே/1218 திருமதி.சரஸ்வதி சண்முகலிங்கம்
28.) யா/வே/1225 திருமதி.சறோஜினிதேவி திருச்செல்வம்
29.) யா/வே/1238 திருமதி.வீரலட்சுமி கஜேந்திரன்
30.) யா/வே/1247 திரு.தம்பையா பொன்னுச்சாமி
31.) யா/வே/1280 திரு.சின்னையா கனகராசா
32.) யா/வே/1329 திருமதி.ஜெயந்தினி சிவபாதசுந்தரம்
33.) யா/வே/1395 திருமதி.உத்தரியம் நாகேந்திரம்
34.) யா/வே/1426 திரு.இராமநாதி குமாரசாமி (செல்வரட்ணம்)
35.) யா/வே/1461 திரு.கணபதி மார்க்கண்டு
36.) யா/வே/1507 திருமதி.தங்கம்மா அப்பையா
37.) யா/வே/1564 திரு.முத்தையா பத்மநாதன்
38.) யா/வே/1601 செல்வன்.நாகேசு பகீரதன்
39.) யா/வே/1634 திருமதி.ஞானேஸ்வரி கந்தசாமி
40.) யா/வே/1714 திருமதி.மதலேனம்மா அந்தோனிப்பிள்ளை
41.) யா/வே/1727 செல்வி.மேரிஸ்ரெலா விக்ரர்
42.) யா/வே/1889 திருமதி.சின்னம்மா நாகலிங்கம்
43.) யா/வே/1932 திரு.சுப்பையா துரைச்சாமி
44.) யா/வே/1988 திரு.முத்தையா தேவானந்தன்
45.) யா/வே/2158 திருமதி.மோனிக்கம்மா நீக்கிலாம்பிள்ளை
46.) யா/வே/2282 திரு.லிங்கப்பிள்ளை பரமநாதன்
47.) யா/வே/2347 திரு.சின்னத்துரை சுப்பிரமணியம்
48.) யா/வே/2379 திரு.ஆறுமுகம் பொன்னுச்சாமி
49.) யா/வே/2434 திருமதி.தவஈஸ்வரிதேவி நடராசா
50.) யா/வே/2438 திரு.சபாரெத்தினம் ஜெயரெத்தினம்
51.) யா/வே/2457 திருமதி.லோறா பெயாற்றிஸ் செல்வநாயகம
52.) யா/வே/2458 திருமதி.யசிந்தா ஜேம்ஸ் இரத்தினசிங்கம்
53.) யா/வே/2488 திரு.மைக்கெல் பிரான்சிஸ்
54.) யா/வே/2515 திருமதி.இராமாசிப்பிள்ளை நமசிவாயம்
55.) யா/வே/2522 திரு.ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை
56.) யா/வே/2543 திருமதி.ஜெஸ்மிமெற்றில்டா வில்பிறட்
57.) யா/வே/2597 திரு.பர்ணாந்து அந்தோனிசாமி
58.) யா/வே/2604 திரு.மாணிக்கம் தங்கேஸ்வரன்
59.) யா/வே/2613 திருமதி.ஞானம்மா சிவபாலன்
60.) யா/வே/2620 திரு.வின்செற்றிபோல் டலிமாசிசபேல்
61.) யா/வே/2665 திரு.சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
62.) யா/வே/2702 திருமதி.தேவராணி சத்தியசீலன்
63.) யா/வே/2706 திருமதி.வாகீஸ்வரி சர்வேஸ்வரன்
64.) யா/வே/2708 திரு.சங்கரப்பிள்ளை சதாசிவம்
65.) யா/வே/2771 திரு.பிரான்சிஸ்சேவியர் அன்ரன்இளங்கோ
66.) யா/வே/2781 திரு.நாகலிங்கம் பாலசுப்பிரமணியம்
67.) யா/வே/2795 திருமதி.சத்தியபாமா செல்லத்துரை
68.) யா/வே/2820 திரு.பொன்னுத்துரை ஜெகதாசன்
69.) யா/வே/2828 திருமதி.பரமேஸ்வரி சுப்பிரமணியம்
70.) யா/வே/2838 திருமதி.சறோசா ஜெயபாலசிங்கம்
71.) யா/வே/2850 திருமதி.கதிராசிப்பிள்ளை வல்லிபுரம்
72.) யா/வே/2888 திரு. நடராசா தர்மலிங்கம்
73.) யா/வே/2905 திருமதி. உதயகுமாரி ஜெயகாந்தன்

### கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவு

01.) யா/க/16 திரு.கார்த்திகேசு சோமசுந்தரம்
02.) யா/க/78 திருமதி.பாக்கியம் குமாரசாமி
03.) யா/க/109 திரு.பொன்னம்பலம் சிற்றம்பலம்
04.) யா/க/125 திருமதி.ஆனந்தமலர் பாலகிருஸ்ணன்
05.) யா/க/149 திருமதி.ஜெயமாலினி ஜெகதீசன்
06.) யா/க/251 திரு.கணபதிப்பிள்ளை சபாநாதன்
07.) யா/க/295 திருமதி.இராசலட்சுமி கோகிலானந்தம்
08.) யா/க/376 செல்வி.சுவேந்திராதேவி மாணிக்கம்
09.) யா/க/405 திரு.சின்னத்தம்பி சிற்றம்பலம்
10.) யா/க/406 திரு.நடராசா சின்னையா
11.) யா/க/452 திரு.கந்தப்பு மகேசன்
12.) யா/க/476 திருமதி.பரமேஸ்வரி செல்லையா
13.) யா/க/557 திரு.சின்னையா இராசசிங்கம்
14.) யா/க/651 திரு.சின்னத்தம்பி இரத்தினசிங்கம்
15.) யா/க/668 திரு.குப்புசாமி ஞானசேகரம்.
16.) யா/க/704 திரு.கதிரித்தம்பி கந்தசாமி
17.) யா/க/776 திரு.கந்தவனம் வேலாயுதம்
18.) யா/க/788 திரு.இளையதம்பி கந்தசாமி
19.) யா/க/790 திருமதி.புவனேஸ்வரி சிற்றம்பலம்
20.) யா/க/799 திருமதி.புஸ்பராணி சிவராஜா
21.) யா/க/913 திருமதி.பாக்கியம் சிவராசசிங்கம்
22.) யா/க/916 திரு.கந்தையா முருகேசு
23.) யா/க/919 திரு.கந்தன் செல்வஞானம்
24.) யா/க/1011 திருமதி.அன்னம்மா சுந்தரலிங்கம்
25.) யா/க/1061 திரு.சின்னத்தம்பி கந்தசாமி
26.) யா/க/1170 திருமதி.பூரணநாயகி சிவபாதம்
27.) யா/க/1194 திரு.சின்னத்தம்பி இராசேந்திரம்
28.) யா/க/1216 திரு.தம்பிராசா இராசநாயகம்
29.) யா/க/1243 திரு.வயிரமுத்து பொன்னம்பலம்
30.) யா/க/1244 திரு.வயிரமுத்து பொன்னம்பலம்
31.) யா/க/1260 திருமதி.ஆச்சி செல்லன்
32.) யா/க/1331 திரு.நடேசு துரைராசா
33.) யா/க/1352 திருமதி.யோகேஸ்வரி தர்மராஜா
34.) யா/க/1358 திருமதி.பவளராணி செல்வராசா
35.) யா/க/1400 திரு.இராசையா நடராஜா
36.) யா/க/1438 திருமதி.சிவதேவி வரதராஜன்
37.) யா/க/1445 திருமதி.கவிதா திருநாமம்
38.) யா/க/1504 திரு.கனகசபை கமலேந்திரன்
39.) யா/க/1579 திரு.கணபதிப்பிள்ளை இரத்தினகோபாலு
40.) யா/க/1616 திரு.சுவாமிநாதன் தளையசிங்கம்
41.) யா/க/1640 திரு.சுப்பிரமணியம் தேவராசா
42.) யா/க/1668 திருமதி.அனுஷிகாதேவி செல்வராஜா
43.) யா/க/1712 திரு.கனகசபை சபாரத்தினம்
44.) யா/க/1758 திருமதி.றஜனி கனகசபை
45.) யா/க/1763 திருமதி.புவனேஸ்வரி கார்த்திகேயன்
46.) யா/க/1788 திரு.இராசையா யோகநாதன்
47.) யா/க/1894 திருமதி.இராசம்மா நடராஜா
48.) யா/க/1916 திரு.கதிர்காமத்தம்பி கதிரவேற்பிள்ளை
49.) யா/க/2059 திருமதி.பரமேஸ்வரி பாலசிங்கம்
50.) யா/க/2074 திரு.செல்லத்துரை புஸ்பதாஸ்
51.) யா/க/2098 திருமதி.தவமணி நடராசா
52.) யா/க/2147 திருமதி.விமலாதேவி கந்தையா
53.) யா/க/2281 திருமதி.செல்வரத்தினம் முத்துச்சாமி
54.) யா/க/2304 திரு.குட்டியன் சின்னக்கிளி
55.) யா/க/2355 திரு.முருகேசு சிதம்பரப்பிள்ளை
56.) யா/க/2360 திரு.சண்முகம் முருகேசு
57.) யா/க/2463 திருமதி.இராசேஸ்வரி சிவசண்முகவடிவேல்
58.) யா/க/2492 திரு.கந்தையா அருச்சுனராஜா
59.) யா/க/2587 திரு.சுந்தரம் சின்னராஜா
60.) யா/க/2591 திரு.அம்பலம் நவநீதராஜா
61.) யா/க/2612 திருமதி.காஞ்சனமாலா தனசேகரம்
62.) யா/க/2617 திரு.பொன்னையா வைத்தீஸ்வரன்
63.) யா/க/2639 திருமதி.இந்திரவதி சிவலிங்கபிள்ளை
64.) யா/க/2647 திரு.செல்லையா சிவசுப்பிரமணியம்
65.) யா/க/2747 செல்வி.சறோஜினியம்மா வேலுப்பிள்ளை
66.) யா/க/2803 திருமதிமீனாட்சி கனகரத்தினம்
67.) யா/க/2870 திரு.வல்லிபுரம் இளம்பூரணம்
68.) யா/க/2898 திரு.வீரகத்தி தம்பையா
69.) யா/க/2902 திருமதி.செல்லம்மா கார்த்திகேசு
70.) யா/க/3024 செல்வி.ஜெயகௌரி இராமச்சந்திரன்
71.) யா/க/3027 திரு.நாகன் ஐயாத்துரை
72.) யா/க/3042 திருமதி.நவமணி திரவியசிங்கம்
73.) யா/க/3061 திரு.ஆழ்வான் செல்வம்
74.) யா/க/3064 திரு.தம்பையா தருமலிங்கம்
75.) யா/க/3082 திரு.வல்லிபுரம் கிருஷ்ணபிள்ளை
76.) யா/க/3087 திருமதி.தங்கமுத்து முருகேசு
77.) யா/க/3106 திருமதி.தவமணிதேவி கிருஷ்ணர்
78.) யா/க/3108 திரு.கந்தவனம் இரத்தினசிங்கம்
79.) யா/க/3143 திரு.சுப்பிரமணியம் சிவஞானம்
80.) யா/க/3186 திருமதி.இராசம்மா சிவப்பிரகாசம்
81.) யா/க/3189 திருமதி.இராஜபூவதி வடிவேலு
82.) யா/க/3221 திரு.முருகன் சிவபாதசுந்தரம்
83.) யா/க/3236 திருமதி.தட்சணேஸ்வரி திருக்கணேசன்
84.) யா/க/3260 திருமதி.அழகம்மா இராசதுரை
85.) யா/க/3296 திரு.அம்பலவாணர் முத்துச்சடையர்
86.) யா/க/3328 திருமதி.அழகம்மா சிவக்கொழுந்து
87.) யா/க/3333 திருமதி.கமலாதேவி இரத்தினம்
88.) யா/க/3434 திருமதி.மகேஸ்வரி குமாரசாமி
89.) யா/க/3499 திரு.சீனிக்குட்டி கந்தசாமி
90.) யா/க/3547 திரு.செல்லத்துரை இராமேஸ்வரன்
91.) யா/க/3561 திருமதி.தங்கேஸ்வரி தவலிங்கம்
92.) யா/க/3569 திரு.கணபதிப்பிள்ளை நடராசா
93.) யா/க/3597 திரு.சிவஞானம் தனபாலசிங்கம்
94.) யா/க/3633 திருமதி.பவானி பாலேந்திரா
95.) யா/க/3653 திருமதி.சிவபாக்கியம் கந்தசாமி
96.) யா/க/3686 திரு.குமாரு உதயகுமார்
97.) யா/க/3708 செல்வி.கௌரி கணபதிப்பிள்ளை
98.) யா/க/3718 திரு.இராமலிங்ககுரு வேதநாயகசர்மா
99.) யா/க/3731 திருமதி.அழகம்மா இந்திரன்
100.) யா/க/3771 திரு.சின்னையா கனகசிங்கம்
101.) யா/க/3937 திருமதி.தவமணிதேவி குணலிங்கம்
102.) யா/க/3938 திருமதி.தியாகேஸ்வரி பரமலிங்கம்
103.) யா/க/3954 திரு.கதிர்காமு சிவலோகம்
104.) யா/க/3960 திருமதி.திலகவதி றெசர்
105.) யா/க/3964 திருமதி.நாகேஸ்வரி தங்கராசா
106.) யா/க/3970 திரு.இராசையா குலேந்திரன்
107.) யா/க/3979 திருமதி.சரஸ்வதி இராசேந்திரம்
108.) யா/க/4019 திரு.கந்தையா வேலும்மயிலும்
109.) யா/க/4036 திருமதி.யோகாதேவி தவகுகநேசன்
110.) யா/க/4037 திரு.சின்னத்தம்பி கனகரத்தினம்
111.) யா/க/4057 திரு.தம்பன் கிட்ணன்
112.) யா/க/4118 திருமதி.கலாவதி கோபால்
113.) யா/க/4128 திரு.இளையதம்பி கந்தையா ஆறுமுகம்
114.) யா/க/4151 திரு.நாகலிங்கம் பத்மநாதன்
115.) யா/க/4183 திரு.வல்லி பூபாலு
116.) யா/க/4240 திரு.தம்பு வடிவேலு
117.) யா/க/4271 திரு.சங்கரன் கந்தன்
118.) யா/க/4323 திரு.வல்லிபுரம் விசுவலிங்கம்
119.) யா/க/4359 திரு.லோறன்ஸ் சிவகுமார்
120.) யா/க/4391 திரு.நாகநாதி கனகராசா
121.) யா/க/4494 திரு.கனகு தங்கேஸ்வரன்
122.) யா/க/4503 திருமதி.பொன்னம்மா பொன்னம்பலம்
123.) யா/க/4506 திரு.தம்பையா பரராசசிங்கம்
124.) யா/க/4515 திரு.இராசன் இராசரத்தினம்
125.) யா/க/4549 திருமதி.புவனேஸ்வரி கெங்காதரன்
126.) யா/க/4595 திரு.ஆறுமுகம் தேவராசா
127.) யா/க/4684 திரு.தியாகராசா கோபாலசண்முகம்
128.) யா/க/4699 திருமதி.இந்திராணி குமாரவேல்
129.) யா/க/4746 திரு.முத்தன் சரவணை
130.) யா/க/4785 திருமதி.வதனபாஸ்கரி குமாரகுலசிங்கம்
131.) யா/க/4877 திரு.சின்னத்துரை செந்திநாதன்
132.) யா/க/4916 திருமதி.இலட்சுமி சிவசிதம்பரம்
133.) யா/க/5117 திருமதி.தவராசேஸ்வரி சிவஞானசுந்தரம்
134.) யா/க/5144 திருமதி.பொன்னம்மா திருநாவுக்கரசு
135.) யா/க/5186 திரு.அண்ணாச்சாமிஐயர் இரவீந்திரசர்மா
136.) யா/க/5254 திரு.நடராஜா இராமகிருஸ்ணன்
137.) யா/க/5275 திருமதி.கமலாதேவி கணேசலிங்கம்

### பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவு

01.) யா/பரு/3 திரு.தங்கராசா மால்மருகசிலசூடாமணி
02.) யா/பரு/83 திருமதி.சிவகாமிஅம்மா கந்தசாமித்துரை
03.) யா/பரு/107 திருமதி.ஞாரத்தினம் தங்கேஸ்வரன்
04.) யா/பரு/111 திரு.இராசகுருஐயர் சின்னத்துரைஐயா
05.) யா/பரு/147 திரு.சேவர்த்தனா நடனலிங்கம்
06.) யா/பரு/159 திரு.பொன்னுச்சாமி இராமச்சந்திரன்
07.) யா/பரு/183 திருமதி.இராஜாமணி உருத்திரவேல்
08.) யா/பரு/264 திரு.அருளம்பலம் ரவீந்திரதாஸ்
09.) யா/பரு/285 திருமதி.மகாலக்ஷ்சுமி விநாயகமூர்த்தி
10.) யா/பரு/364 திரு.நாகமணி தனபாலசிங்கம்
11.) யா/பரு/411 திரு.சபாரத்தினம் சிவஞானசுந்தரம்
12.) யா/பரு/469 திரு.அருளம்பலம் ராம்குமார்
13.) யா/பரு/485 திருமதி.சந்திராதேவி துரைராசா
14.) யா/பரு/548 திரு.இரத்தினசிங்கம் பசுபதி
15.) யா/பரு/612 திருமதி.சரோஜா செல்வரெட்ணம்
16.) யா/பரு/632 திரு.முத்தையா கதிரவேற்பிள்ளை
17.) யா/பரு/668 திருமதி.சின்னப்பிள்ளை கணபதிப்பிள்ளை
18.) யா/பரு/675 திரு.சூசைப்பிள்ளை சகாயரட்ணராஜா
19.) யா/பரு/690 திரு.தவலிங்கம் இரவீந்திரா
20.) யா/பரு/703 திரு.மயிலு நாகராசா
21.) யா/பரு/740 திரு.ஏரம்பு வேலுப்பிள்ளை
22.) யா/பரு/834 திரு.பாலகிருஷ்ணன் இரகுநாதன்
23.) யா/பரு/854 திருமதி.பிறேமராணி ஜெயானந்தம்
24.) யா/பரு/879 திரு.முத்துசாமி லோகேஸ்வரன்
25.) யா/பரு/886 திரு. சிவகுரு தங்கவடிவேலு
26.) யா/பரு/911 திரு. சோமசுந்தரம் பாலேந்திரன்
27.) யா/பரு/1081 திருமதி. விஜயலட்சுமி பாலசிங்கம்
28.) யா/பரு/1121 திரு.கொண்ட்றங்கிசெட்டிமார் சிவக்கொழுந்து
29.) யா/பரு/1146 செல்வி.விமலா வல்லிபுரம்
30.) யா/பரு/1180 திரு.சிவராமலிங்கம் சுகிர்தலிங்கம்
31.) யா/பரு/1216 திருமதி.சந்திரவதனா நித்தியானந்தன்
32.) யா/பரு/1261 திரு. கந்தசாமி மகேந்திரராசா
33.) யா/பரு/1267 திருமதி. சாந்தினி கிருஷ்ணன்
34.) யா/பரு/1280 திரு.அல்பிறற் தங்கராசா அலோசியஸ் தேவராசா
35.) யா/பரு/1288 திரு.இரத்தினசாமி தங்வேலாயுதம்
36.) யா/பரு/1304 திருமதி.சந்திரமணி விநாயகமூர்த்தி
37.) யா/பரு/1380 திரு.இரத்தினம் தங்கராஜா
38.) யா/பரு/1398 திருமதி.இரத்தினகாந்தி சண்முகவடிவேல்
39.) யா/பரு/1429 திரு.கணபதிப்பிள்ளை செல்லத்துரை
40.) யா/பரு/1434 திருமதி.பகீரதி கணேசமூர்த்தி

நாளை தொடரும்.......

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.*

*திருக்குறள்.*

# நமது நோக்கு

## புதிய மாற்றம்!

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்காக, அரசாங்கம் முன்வைத்த யோசனைகளை ஆராய்ந்து - அதற்குப் பதிலாக மாற்று யோசனைகளை முன்வைக்கும் முயற்சிகளில் புலிகளின் அரசியல் விவகாரக்குழு ஈடுபட்டிருக்கிறது.

புலிகளின் தலைமைப்பீடத்தின் ஆலோசனைகள் அடங்கிய யோசனைகள், பாரிஸில் நடைபெறும் மாநாட்டில், சட்ட நிபுணர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களால் ஆராயப்பட்டு வருகிறது. அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டுக்கான சகல ஒழுங்குகளையும், பிரான்ஸ் அரசாங்கமே மேற்கொண்டுள்ளது.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டபோது - பேச்சுக்களைத் தமது நாட்டில் நடத்த வேண்டும் என்று, பல்வேறு நாடுகளும் விருப்பம் தெரிவித்திருந்தன.

இலங்கை அரசாங்கம் விடுத்த கோரிக்கை என்ற நோக்கத்தில் தான் இந்தப் பேச்சுக்களை நடத்த அந்த நாடுகள் விருப்பம் தெரிவித்திருந்தன என்று கூறப்படடாலும், இப்போது நடைபெறும் சம்பவங்களை வைத்து நோக்கும்போது, சர்வதேச சமூகம், புலிகளின் பக்கத்தில் உள்ள நியாயங் களைப் புரிந்துகொள்ளத் தொடங்கியிருக்கிறது என்ப தைத் தெளிவாக உணர்ந்துகொள்ள முடிகிறது.

ஈழத்தமிழ் மக்களின் போராட்டத்தை, இலங்கை அரசு சர்வதேச மட்டத்தில் ஒரு பயங்கரவாத யுத்தமாகக் காட்டுவதில் கணிசமான வெற்றியை முன்னர் பெற்றிருந்தது. ஆனால், சர்வதேச சமூகத்தின் இந்தப் பார்வையையும், ஈழத்தமிழரின் போராட்டத்தின்பால் உள்ள நியாயப்பாடுகளையும் - இந்தப் போராட்டத்தில் புலிகளின் பங்களிப்பையும் சர்வதேச சமூகம் தெளிவாகவே புரிந்து கொண்டிருக்கிறது.

காலம் தாழ்த்தியென்றாலும், இந்த நியாயங்கள் சர்வதேச சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றதே என்பதில், ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரும் மகிழ்ச்சி கொள்ளவேண்டும்.

புலிகள், சர்வதேச சட்ட நிபுணர்களுடன் -அரசியற் தீர்வு யோசனைகளை ஆராயப்போகின்றனர் என்றவுடன்- புலிகள் என்றாலே முன்னர் ஒதுங்கிக்கொள்ள நினைத்த நாடுகளெல்லாம் விழுந்தடித்துக்கொண்டு, தமது நாட்டில் இந்த மாநாட்டை நடத்துவதற்கான அழைப்புக்களை விடுத்தன.

ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், சுவீடன், நோர்வே, டென்மார்க் என்று பல ஐரோப்பிய நாடுகள் - புலிகள், திட்ட வரைபு குறித்து ஆராயும் கூட்டத்தை நடத்துவதற்குச் சகல ஒழுங்குகளையும் செய்துகொடுக்க ஆயத்தமாக இருந்துள்ளன.

தமது நாட்டில் இந்தக் கூட்டம் நடத்தப்படுவதை, ஐரோப்பிய நாடுகள் விரும்புகின்றன என்றால் - புலிகள் மீது இந்த நாடுகள் கொண்டிருக்கும் நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையுமே வெளிப்படுத்திருயிருக்கின்றன.

இலங்கை அரசின் எந்தத் தலையீடும் இல்லாமல், புலிகள் நடத்தும் இந்த மாநாட்டிற்குச் சர்வதேச நாடுகள் பலவும் தமது ஆதரவைத் தெரிவிக்க முன்வந்துள்ளமை முக்கியமானதொரு சமிக்ஞையாகவே தெரிகின்றது.

தற்போதைய சமாதான முயற்சிகளின் வேகம், சற்றுக் குறைவாக இருந்தாலும் - சமாதான முயற்சிகளின் மீது சர்வதேச சமூகம் எந்தளவுக்கு ஆர்வம் காட்டுகின்றது என்பதும், தமிழர் தரப்பின் மீது அரசு கரிசனை கொண்டிருக்கிறது என்பதும்,

இதேவேளை - பாரிஸில் புலிகள் தயாரிக்கும் திட்ட வரைபு, சர்வதேச ரீதியான கவனத்தை ஈர்க்கவுள் ளதும் குறிப்பிடத்தக்கதொன்றாகும். ஏனெனில், புலிகள் தரப்பு இதுவரை எந்தவொரு தீர்வு யோசனைகளையும் முன்வைக்கவில்லை.

புலிகள் தரப்பினால் இதுவரை எந்தத் தீர்வு யோசனையும் முன்வைக்கப்படாத நிலையில், இப்போது முதன்முதலில அது பற்றிய முயற்சியில் இறங்கியிருப்பதால் அதிக முக்கியத்துவம் எழுகிறது.

இதனால், தான் சர்வதேச கவனம் இந்த மாநாட்டை நோக்கித் திரும்பியிருக்கிறது. புலிகள் எத்தகையத் தீர்வு யோசனையை முன்வைக்கப்போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பு நிறையவே ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலையில், புலிகள் தயாரிக்கவுள்ள தீர்வு யோசனைகள் - அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படும்போது - அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா அல்லது நிராகரிக்குமா என்ற கேள்வியும் அரசியல் வட்டாரங்களில் கிளம்பியுள்ளன.

நாட்டில் அமைதி நிலவவேண்டுமெனில், புலிகள் முன்வைக்கும் தீர்வு யோசனையை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

புலிகள் அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்கும்போது - அதுவும் வடக்கு -கிழக்கில் வாழும் மக்களுக்கு அமைதியான தீர்வு யோசனைகளை முன்வைக்கும்போது, அதை ஆக்கபூர்வமாக அணுகவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இதை அரசு நிராகரிக்க முற்பட்டால், நாட்டில் அமைதி நிலவுவது சந்தேகம் என்பதுடன், சர்வதேச சமூ கத்தின் ஆதரவையும் அரசு இழக்க நேரிடலாம்.

---

### அமைச்சர்கள் பீரிஸ், மிலிந்த மொறகொட

# இடைக்கால நிர்வாகம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவருடன் பேசுவர்!

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் அமைப்பது தொடர்பாக, எதிர்க்கட்சித் தலைவருடன் பேசுவதற்கு அமைச்சர்கள் - பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோர் திட்டமிட்டுள்ளனர்.

அரசினால் தயாரிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகம் தொடர்பான, நகல் சட்ட ஆலோசனை குறித்து - ஏற்கனவே, ஜனாதிபதிக்கு பிரதமர் விளக்கமளித்துள்ளார்.

இதேவேளை - எதிர்க்கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில், எதிர்க்கட்சித்தலைவருடனான அமைச்சர்களின் சந்திப்பு அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள், பாரீஸ் மாநாடு முடிந்த பின்னர்- சமர்ப்பிக்கும் இடைக்கால நிர்வாகம் தொடர்பான நகலில், சாதகமான பதில் கிடைக்கப் பெற்றதும், ஏனைய அமைச்சர்களுடனும் - சந்திப்பு ஒன்றை இவ்விரு அமைச்சர்களும் நடாத்துவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

### 750 மில்லியன் ரூபா செலுத்துமாறு

## 'தினகர' பத்திரிகைக்கு எதிராக ரவி கருணாநாயக்க கோரிக்கை!

வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க பற்றி, அவதூறாகச் செய்தி வெளியிட்ட, வாராந்த சிங்களப் பத்திரிகை மீது - 750 மில்லியன் ரூபா நஷ்டஈடாகத்தருமாறு கோரி,சட்டத்தரணி மூலம் அறிவித்துள்ளார்.

இந்தக் கடிதம் கிடைக்கப் பெற்று, இருவார காலத்துக்குள் நஷ்டஈடு வழங்காதுவிடின் - சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், 'அபான்ஸுக்கு விற்கப்படுகிறது. சொக்ஸிக்கும், ரவிக்கும் கொமிஸ்' என்ற செய்தியால், தனக்கு அவதூறு ஏற்பட்டுள்ளதாகவும் - இதனால் அமைச்சர் என்ற வகையிலும், ஒரு நபர் என்ற வகையிலும் தனக்கு 750 மில்லியன் ரூபா தருமாறு, அமைச்சர் ரவி கருணாநாயக்கா சட்டத்தரணி மூலம் மானநஷ்டம் கோரி - 'தினகர' பத்திரிகைக்கு அறிவித்தல் கொடுத்துள்ளார்.

## போக்குவரத்து பொலிஸார் நெடுந்தீவில் பரிசோதனை!

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதியில் பொலிஸார் தற்போது மோட்டார் சைக்கிள் பாவனையாளர்களிடம்- தலைக்கவசம், வரிக் காப்புறுதிச் சான்றிதழ் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் போன்றவற்றைப் பரிசோதிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

அத்துடன், சட்டவிரோதமான மதுபான விற்பனையில் ஈடுபடுவோரும் கைதுசெய்யப்பட்டு, மதுபான வகைகள் அனைத்தும் பொலிஸாரால் எடுத்துச் செல்லப்படுவதுடன், சட்ட விரோதமாக விற்பனை செய்தோரின் முறைப்பாடும் பெற்றுக்கொள்ளப்படுகிறது

இதுவரை காலமும் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தின் கீழ் இயங்கிய நெடுந்தீவு பொலிஸ் நிலையம், தற்போது தரமுயர்த்தப்பட்டு, உரிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டதால் - மேற்படி நடைமுறைகளைச் செயற்படுத்தப்படுவதாகத் தெரியவருகிறது.

# வானொலி நிலையம் அமைப்பதற்கு தலதா மாளிகைக்கு மறுப்பு ஏன்?

### மங்கள சமரவீர கேள்வி

வானொலி அலைவரிசை ஒன்றை ஆரம்பிப்பதற்கு புலிகளுக்கு அனுமதி வழங்க முடியுமானால், கண்டி தலதா மாளிகைக்கு ஏன் அனுமதிக்க முடியாது என்று, மங்கள சமரவீர கேள்வி எழுப்பியுள்ளார்

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டபோதே, இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் உங்களது ஆட்சியில் எவ்வாறு அனுமதிகள் வழங்கப்பட்டன என்பது தொடர்பான தகவல்கள் எம்மிடம் உள்ளன. அதற்கென்று தனியான விவாதம் ஒன்று நடாத்தப்படுமானால், அது பல தகவல்களை பெற்றுக்கொள்ள வழிசமைக்கும் என, பதில் அளித்தார். கண்டி தலதா மாளிகைக்கு தனியான வானொலி அலை வரிசை ஒன்றை அமைக்கமுடியாமல் போனமைக்கு பல காரணங்கள் உள்ளன.

விடுலைப் புலிகளால் சட்டரீதியற்ற முறையில் நடத்திக் கொண்டுபோன ஒரு அலைவரிசையை, அரசாங்கம் அனுமதி வழங்கியதன்மூலம் - அதனைச் சட்ட வரையறைக்குள் கொண்டு வந்துள்ளது. தலதா மாளிகை விடயம் அதற்கு மாறானது எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

விரைவில் வானொலி, தொலைக்காட்சி அலைவரிசை ஆரம்பிப்பது தொடர்பான சட்டமூலம் ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதில் பல நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன என்றும் மேலும் அமைச்சர் தெரிவித்தார்.

## அரசாங்க ஊழியர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டம்

### திறைசேரிச் செயலாளர் தெரிவிப்பு

பழைய ஓய்வூதியத் திட்டத்துக்குப் பதிலாக, புதிதாக 'பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

01.01.2003 ஆம் திகதிக்குப் பின்னர், அரச மற்றும் மாகாண சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டோரே, இத்திட்டத்தில் உள்வாங்கப்படுவர் என்று, திறைசேரியின் செயலாளர் ஜே. சரித்த ரத்வத்த சகல திணைக்களங்களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதற்காக, ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளரின் கீழ் பங்களிப்பு ஓய்வூதிய நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அமைய, தற்காலிக, ஒப்பந்த, நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் அரச ஊழியர்கள், இந்தப் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படமாட்டார்கள்.

இவர்கள், நிரந்தர சேவைக்கு உள்வாங்கப்படும்போது, இத்திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இந்த நிதிக்கு - உத்தியோகத்தர் தனது சம்பளத்தில் எட்டு வீதத்தையும், அரசாங்கம் பன்னிரண்டு சதவீதத்தையும் செலுத்தவேண்டும் என, திறைசேரிச் செயலாளர் சரித்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

## போலிக் கடவுச்சீட்டு மூலம் கனடா சென்ற நபர் கைது!

போலிக் கடவுச் சீட்டின் மூலம், அவுஸ்திரேலியாவிலிருந்து கனடா செல்ல முயன்ற - இலங்கையர் ஒருவரை, அந்த நாட்டின் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் கைதுசெய்தனர்.

இந்தச் சம்பவம் - சிட்னி நகர விமான நிலையத்தில் இடம்பெற்றது. இந்த நபரின் விமானப் பயணம் தொடர்பாக, எழுந்த சந்தேகங்களையடுத்தே, இவரை விமானநிலையச் சுங்கப் பகுதியினர விசாரணை செய்தபோது, பல தகவல்கள் அம்பலமாகியுள்ளன.

இவர், 13 வருடங்களுக்கு முன்பு பறிக்கப்பட்ட கடவுச்சீட்டு மூலம், பயணத்தை மேற்கொள்ள முயன்றார் என்றும், தான் ஒரு அவுஸ்திரேலியப் பிரஜை என்று தெரிவித்தபோதிலும், இவரால், ஆங்கிலம் பேசமுடியாமல் இருந்தமை, விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

பிரஸ்தாப நபரின் கடவுச்சீட்டு காலவதியாகிய ஒரு வருடத்துக்கு மேலாகியும், அவுஸ்திரேலியாவில் தங்கி இருந்தவர் என்பதோடு, வேறு ஒருவரின் கடவுச்சீட்டின் மூலம் பயணத்தைத் தொடரவிருந்தார் என்றும், விசாரணைகளிலிருந்து மேலும் தெரியவருகிறது. இவர், தற்போது 'ரில்லவூட்' தடுப்பு முகாமில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களை முஸ்லிம் காங்கிரஸ் ஏமாற்றுகின்றது

### ஜே.வி.பி.யின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச

கிழக்குப் பகுதியில் வாழும் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாது, அந்த மக்களை ஏமாற்றும் வகையில் முஸ்லிம் காங்கிரஸ் செயற்பட்டு வருகிறது.

இவ்வாறு ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கிழக்குப் பிராந்திய முஸ்லிம்கள், இன்று மிகவும் அச்சுறுத்தலான நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். கொலைக் கலாசாரத்துக்கு எதிராக, அவர்கள் தமது எதிர்ப்பினை வெளிக்காட்டி வருகின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம், படையினரைக் கட்டிப் போட்டுள்ள அரசாங்கம், கிழக்கு வாழ் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தவறிவிட்டது.

இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராக, செயற்பட அரசாங்கத்தை வலியுறுத்தாமல் - முஸ்லிம் காங்கிரஸ், முஸ்லிம் மக்களை ஏமாற்றும் செய்திகளைத் தெரிவித்து வருகின்றது. தமது உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் கிழக்கு வாழ் முஸ்லிம்களுக்கு, எமது முழுமையான ஆதரவை நாம் வழங்குவோம் என்று, விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார்.

# இந்திய சுதந்திரப் போராட்டத்தில் நீங்காத இடம்பிடித்த நேதாஜி

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் 1982 ஆம் ஆண்டு மதுரையில், பழ.நெடுமாறன் இல்லத்தில் தங்கியிருந்தபோது, மதுரை வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவர்கள், "இந்திய சுதந்திர அரசாங்கத்தின்" பிரகடனத்தை, 1943 ஆம் ஆண்டு அறிவித்ததை நினைவு கூரும் நிகழ்ச்சி அது. இந்திய தேசிய இராணுவத்தைச் சேர்ந்த மகளிர் பிரிவுத் தளபதி கப்டன் இலட்சுமி அந்த விழாவில் சிறப்புரை ஆற்ற இருந்தார். அந்த விழாவில் பேசுவதற்காக, பழ.நெடுமாறன் அழைக்கப்பட்டிருந்தார். அதில் கலந்து கொள்வதற்காக, பழ.நெடுமாறன் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தபோது, தலைவர் பிரபாகரன் தானும் அந்த விழாவிற்கு உடன் வருவதற்கு விருப்பம் தெரிவித்ததால், அவரையும் அழைத்துக் கொண்டு, பழ.நெடுமாறன், வை.எம்.சி.ஏ. மண்டபத்திற்குச் சென்றார்.

விழா மண்டபத்தில், நேதாஜி அமைத்த இந்திய தேசிய இராணுவத்தின் வீரர்கள் ஏராளமாகக் கூடியிருந்தார்கள். தலைவர் பிரபாகரனை, முன்வரிசையில் வந்து அமரும்படி கேட்டுக்கொண்டபோது, அவர் அதனை மறுத்துவிட்டு, வரிசையிலிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்துகொண்டு நிகழ்ச்சியை உன்னிப்பாகக் கவனித்தார். கப்டன் இலட்சுமி மேடைக்கு வந்தபோது, அனைவரும் எழுந்து நின்று, நேதாஜியின் 'இந்திய தேசிய இராணுவத்தின் கீதத்தை' உரத்த குரலில் பாடினார்கள். அப்போது, கப்டன் இலட்சுமியின் விழிகளிலும், கூடியிருந்த வீரர்களின் விழிகளிலும் கண்ணீர் பெருக்கெடுத்தது. அதனையும் தலைவர் பிரபாகரன் கவனித்தார். நிகழ்ச்சி முடிந்து தேசியத் தலைவர் பிரபாகரனும், பழ.நெடுமாறனும் திரும்பியபோது, அந்த நிகழ்ச்சியைப் பற்றி மன நெகிழ்வுடன் தலைவர் பிரபாகரன் பேசிக்கொண்டுவந்தார். 'அண்ணா! இந்த வயதான காலத்திலும்கூட, அந்த வீரர்கள் நேதாஜியைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் எப்படி நெகிழ்ந்து போகின்றார்கள் என்பதைப் பார்த்தபோது, நான் உருகிப் போனேன். அவர்களை எப்படி நேதாஜி உருவாக்கியிருக்கிறார் என்பது போற்றத்தக்கதாகும்' - என்று தலைவர் பிரபாகரன், மன நெகிழ்வுடன் பழ.நெடுமாறனுக்குக் கூறினார்.

தலைசிறந்த போராளியும், அரசியல் ஞானியும், ராஜதந்திரியுமான நேதாஜி சுபாஸ் சந்திரபோஸின் நினைவு தினம் ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதியாகும். 1945 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதியன்று, ஜப்பானுக்குப்போகும் வழியில், நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் பயணம் செய்த விமானம் தீப்பிடித்து விபத்துக்குள்ளாகியதால், அவர் மரணமடைந்ததாக இன்றுவரை நம்பப்படுகிறது.

வரலாறுகள் விவாதிக்கப்படுகின்ற காலகட்டம் இது. தங்களுக்கு ஏற்ற வகையில் வரலாற்றைத் தயாரித்து அளிக்கின்ற அரசியலும், அரசியல்வாதிகளும் நிறைந்த உலகம், இன்றைய உலகம். இப்படியான சூழ்நிலையில், இந்திய வரலாற்றில் ஒளிவிடும் சில மனிதர்களையும் அவர்களது தன்னலமற்ற வாழ்க்கையையும், சரியான விதத்தில் நினைவூட்டிக் கொள்வது, அவசியமானதாகும்.

நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் இந்திய சுதந்திரத்திற்காக, மாபெரும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை எதிர்த்து, நேரடியாகப் போராட்டத்தில் இறங்கினார். அவருக்கு எதிராகப் பல அபாண்டமான அவதூறுகள் எழுந்தன. அவற்றில் அரைப்பங்கை பிரிட்டிஷ் அரசு செய்தது என்றால், மிகுதிப்பங்கை அன்றைய இந்தியத் தலைவர்கள் செய்தார்கள் என்பதே வரலாற்று உண்மையாகும்.

'சுபாஸ் சந்திரபோஸ் அவசரக்காரர் - ஆத்திரக்காரர்' என்று கூறினார் மகாத்மா காந்தி.

'சுபாஸ் சந்திரபோஸ் படபடப்பானவர்- பண்படாதவர்' என்று கூறினார் ஜவகர்லால் நேரு.

ஆனால், நேதாஜியோ ஒரு முழுமையான தேசபக்தனுக்குரிய அம்சங்கள் அனைத்தையும் கொண்ட ஒரு தன்னிகர் இல்லாத் தலைவராகச் செயற்பட்டார்.

நேதாஜியின் வாழ்க்கை அனுபவங்களும், அபூர்வமானவையே. தியாக உணர்வும், துறவு மனப்பான்மையும் இளமைப் பருவம் முதலாகவே, நேதாஜியின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து இருந்தன. தனது 16 ஆவது வயதில் துறவியாக விரும்பி தனது வீட்டைவிட்டே வெளியேறினார். 24 ஆவது வயதில், மிகுந்த செல்வாக்குக் கொண்ட, உயர்பதவியான ஐ.சி.எஸ் உத்தியோகத்தைத் தூக்கி எறிந்தார். 'கட்டாக்' நகரில், தாம் பிறந்த மாளிகையை, தனது 35 ஆவது வயதில், தேசத்திற்காக அர்ப்பணித்தார். 42 ஆவது வயதில், முழுப் பெரும்பான்மைப் பலத்தோடு வெற்றி பெற்றிருந்த, அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் பதவியைத் தூக்கி எறிந்தார். 44 ஆவது வயதில், தன் உயிரினும் மேலாகக் கருதிய பாரத தேசத்தை விடுவிக்க வேண்டுமென்பதற்காகத் தன் தேசத்தைவிட்டே வெளியேறி, தன் உயிரையே பணயம் வைத்து, ஜேர்மனியிலும், ஜப்பானிலும், கிழக்காசிய நாடுகளிலும் அலைந்து திரிந்து, ஒரு தற்காலிகச் சுதந்திர அரசை அமைத்து, இந்திய தேசிய இராணுவத்தைத் திரட்டி, போரிட்டு, உலக வரலாற்றிலேயே ஒரு புதிய சாதனையை - அத்தியாயத்தை உருவாக்கியவர் நேதாஜி சுபாஸ் சந்திர போஸ்.

'ஒரு நாட்டின் சுதந்திரம் என்பது- போராடி, இரத்தம் சிந்தி, உயிர்த்தியாகம் செய்து கைப்பற்ற வேண்டியதே தவிர, கெஞ்சியும் கேட்டும் பெறுவதல்ல, பேரம் பேசிப் பெறுவதும் அல்ல' - என்று முழங்கியவர் நேதாஜி. அதேநேரம் காங்கிரஸ் தலைவர்கள் சிலரது செய்கைகள் நேதாஜியை மனம் நோக வைத்தன.

1928 ஆம் ஆண்டு மே மாதத்தில் நடந்த மராட்டிய மாநில காங்கிரஸ் அரசியல் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய நேதாஜி, 'பூரண சுதந்திரமே இந்தியாவின் இலட்சியம்' என்று பிரகடனம் செய்தார். ஆனால்- மோதிலால் நேருவும், மகாத்மா காந்தியும் இந்தியாவிற்கு ஒரு 'பூரண குடியேற்ற நாட்டு அந்தஸ்து - **Dominion Status** தந்தாலே போதுமானது'- என்றரீதியில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி, 'பூரண சுதந்திர இந்தியா' என்ற பிரகடனத்தைப் புறம் தள்ளினார்கள். ஆனால், இந்த 'பூரண சுதந்திர இந்தியா' - என்ற தீர்மானம் ஏற்கனவே 1927 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சென்னையில் நடைபெற்ற 42 ஆவது காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தது. ஆகவே - ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருந்த தீர்மானத்திற்கு எதிராக, மகாத்மா காந்தியும் - மோதிலால் நேருவும் முடிவு எடுத்ததை நேதாஜி எதிர்த்தார். மகாத்மா காந்தியின் இந்த முடிவு பிழை என்றும், 'பூரண சுதந்திரமே இந்தியாவின் இலட்சியம்' என்ற பிரகடனமே சரியானது என்றும் நேதாஜி வாதிட்டார். நேதாஜியின் தர்க்கம், தீர்க்கதரிசனமாகப் பின்னர் பலித்தது.

1929 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி லாகூரில் இந்திய காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது. அப்போது - 'பூரண சுதந்திரமே இந்தியாவின் இலட்சியம்' என்ற பிரகடனத்தை, மகாத்மா காந்தியே முன்மொழிந்தார். அதனை ஆதரித்துப் பேசிய நேதாஜி கீழ்வருமாறு கூறினார்-

'அன்று இத்தீர்மானத்தை எதிர்த்த அதே மகாத்மா காந்தியால், இன்று முன்மொழியப்பட்ட எங்களது தீர்மானம், பண்டித மோதிலால் நேருவால் ஆமோதிக்கப்பட்டு, இன்று நிறைவேற்றுவதைக் காண நான் பெரும் கிழ்ச்சி அடைகின்றேன். ஆனால்- இந்தத் தீர்மானத்தைக் கிடப்பில் போட்டுவிடாமல், உள்ளபடியே நாம் செயல்பட வேண்டுமானால், அதற்கு நான் கூறும் ஒரு திருத்தத்தையும் ஏற்றுக்கொள்ளும்படி இந்தச் சபையை நான் கேட்டுக்கொள்கிறேன்.

'பரிபூரண சுதந்திரத் திட்டம்' வெற்றிபெற, இங்குள்ள பிரிட்டிஷ் ஆட்சியை நாம் சிறிதும் - மதிக்கக் கூடாது. பிரிட்டிஷ் அரசாங்கத்தைத் திணறச் செய்வதற்காக அயர்லாந்தில் அமைக்கப்பட்டது போல, ஒரு சுதந்திர இந்திய போட்டி அரசாங்கத்தை நாம் அமைக்க வேண்டும்'- என்று ஒரு திருத்தத்தை நேதாஜி கொண்டு வந்தார். சுபாஸ் சந்திரபோஸின் திருத்தத்திற்குப் பதில் அளித்துப் பேசிய மகாத்மா காந்தி, 'சுபாஸ் கூறுவது சிறந்த யோசனைதான். ஆனால், இன்று அதற்கு வேணடிய மக்கள் சக்தியும், சாதனங்களும் கிடைக்குமா என்பதைச் சற்றுச் சிந்தித்தல் அவசியம்' - என்று கூறி, நேதாஜியின் திருத்தத்தை நிராகரித்தார். நேதாஜி கொண்டு வந்த அந்தத் திருத்தம் தோல்வியுற்றது.

அதுமட்டுமல்ல - அன்றைய தினம் இன்னுமொரு முறைகேடான விடயமும் அந்த லாகூர் மாநாட்டில் நடைபெற்றது. அகில இந்திய காங்கிரஸ் செயற்குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் வேலை, ஜனவரி இரண்டாம் திகதி காலையில் நடக்கும் என்று, காங்கிரஸ் தலைவர் ஜவஹர்லால் நேரு அறிவித்திருந்தார். ஆனால், சுபாஸ் சந்திரபோஸும், மற்றைய வங்காளத் தலைவர்களும் இல்லாத நாளான- ஜனவரி முதலாம் திகதி அன்றே, செயற்குழு உறுப்பினர் தேர்தலை நேரு நடத்திவிட்டார். அதாவது, அறிவிக்கப்பட்ட நாளுக்கு ஒரு நாள் முதலாகவே, இத்தேர்தல் நடத்தப்பட்டது. இதனால் - செயற்குழு உறுப்பினர் பட்டியலில் நேதாஜியின் பெயர் இடம்பெறவில்லை. சரியாகச் சொல்லப்போனால், நேதாஜிக்கு ஆதரவானவர்களைத் தவிர்த்து, அவருக்கு எதிரானவர்களை அந்தத் திடீர்த் தேர்தல், அங்கத்தவர்களாக நியமித்திருந்தது.

செய்தியை அறிந்த நேதாஜி திடுக்கிட்டுப் போனார். 'ஜவஹர்லால் நேருவா இப்படிச் செய்தார்' - என்று நேதாஜியால் நம்பவே முடியவில்லை. அடுத்த நாள் மாநாட்டில் பேசிய நேதாஜி 'செயற்குழு உறுப்பினர் தேர்தல், முறையாக நடக்கவில்லை'- என்பதைச் சுட்டிக்காட்டி, இச்செயலை வன்மையாகக் கண்டித்தார். 'காங்கிரஸ் செயற்குழு, மிதவாதிகளின் கைப்பொம்மையாகச் செயற்படுவதாகக் கூறிய நேதாஜி, 'காங்கிரஸ் ஜனநாயகக் கட்சி' - என்ற புதிய கட்சியை அமைப்பதாக அன்றைய தினம் அறிவித்தார்.

நேதாஜியின் அரசியல் வாழ்க்கை- போராட்டமும், சிறைவாசமுமாகத் தொடர்ந்தது. வெளிநாடுகளுக்குப் பயணம் செய்து, இந்திய சுதந்திரப் போராட்டத்திற்காக அவர் ஆதரவு திரட்டியும் வந்தார். வியன்னா நகரில் நேதாஜி இருந்தபோது, ஜவஹர்லால் நேரு கடிதம் ஒன்றை நேதாஜிக்கு எழுதினார். லட்சுமணபுரியில் நடக்கவிருக்கும் காங்கிரஸ் மகாசபைக்கு, சுபாஸ் சந்திரபோஸ் தலைமையேற்று நடத்தவேண்டும் என்று நேரு வேண்டியிருந்தார். ஆனால், பம்பாய் துறைமுகத்தை நேதாஜி வந்தடைந்த போது, அவரைப் பயங்கரவாதி என்றும், பயங்கரவாதத்தைப் பரப்புகின்ற தலைவர் என்றும், பிரிட்டிஷ் அரசு குற்றஞ்சாட்டிக் கைதுசெய்தது.

சுமார் 11 மாதங்கள் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். ஆயினும்- 1937 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் பத்தாம் திகதி அன்று, கல்கத்தாவில், காங்கிரஸ் கட்சித் தலைவராக நேதாஜி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இரண்டாவது உலக மகாயுத்தம் அப்போது ஆரம்பமாகியிருந்தது. 'இந்த யுத்தத்தில் இங்கிலாந்து முக்கிய பங்கு வகிக்கும், இத்தருணத்தில் அதற்கு இடையூறு செய்வது போல், சுதந்திரத்திற்கான கிளர்ச்சிகளைச் செய்யக்கூடாது' - என்பது மகாத்மா காந்தியின் நிலைப்பாடாக இருந்தது. ஆனால் சுபாஸ் சந்திரபோஸோ, வேறு கருத்தினைக் கொண்டிருந்தார்.

'இந்த யுத்தத்தில் இந்தியாவின் அனுமதியை, இங்கிலாந்து கேட்கவில்லை. கேட்காமலே யுத்தத்தில் நமது நாட்டைப் பிணைத்தவர்களுக்காக நாம் ஏன் தயங்க வேண்டும்? ஏன் தயவுகாட்டவேண்டும்? நம்முடைய சுதந்திரத்தைப் பெறுவதற்கு அருமையான வாய்ப்பு இது. இதுவே தகுந்த தருணம். இதனை நழுவவிடுவது மதியீனமாகும்' என்பதே நேதாஜியின் நிலைப்பாடாக இருந்தது.

'போராட்டம் இன்றிச், சுதந்திரத்தைப்பெற முடியாது. போராடித்தான் சுதந்திரத்தைப்பெறவேண்டும். குறைந்தபட்ச செயற்திட்டம் ஒன்றை வைத்துக்கொண்டு காங்கிரஸ் கட்சி, சுதந்திரப் போராட்டத்தைத் துரிதப்படுத்த வேண்டும்' - என்றும் நேதாஜி வற்புறுத்தி வந்தார். இந்தவேளையில் - மீண்டும் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவருக்கான தேர்தல் வந்தது. நேதாஜிக்கு எதிராக பட்டாபி சீத்தாராமையா நிறுத்தப்பட்டார். பட்டாபி சீத்தாராமையாவிற்கு ஆதரவாக- காந்திஜி, ஜவஹர்லால் நேரு, ராஜாஜி, ராஜேந்திர பிரசாத், வல்லபாய் பட்டேல், கிருபளானி போன்ற நாடறிந்த தலைவர்கள் இருந்தார்கள். 1939 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி அன்று காங்கிரஸ் தலைவர் பதவிக்குத் தேர்தல் நடந்தது. நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் மகத்தான வெற்றி அடைந்தார். நேதாஜியின் வெற்றி- மகாத்மா காந்திக்கும், மற்றவர்களுக்கும் பேரதிர்ச்சியை அளித்தது. நாட்டு மக்களுக்கோ அது அளவற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

ஆனால் - காங்கிரஸ் கட்சிக்குள் நிலைமை மோசமானது. இவ்வேளையில் மகாத்மாகாந்தியும் தனது கருத்தை வெளிப்படையாகச் சொன்னார். 'சுபாஸ் சந்திரபோஸ் காங்கிரஸின் தலைவராகக்கூடாது என்பதற்காகவே, நான் பட்டாபி சீத்தாராமய்யாவை தேர்தலில் நிற்கச் சொன்னேன். எனவே பட்டாபியின் தோல்வி என்னுடைய தோல்வி என்பதை ஒப்புக்கொள்கின்றேன்' என்று மகாத்மா கூறினார். மகாத்மாகாந்தியின் அறிக்கையைப் பார்த்து, நேதாஜி திடுக்குற்றார். தமது வெற்றியை மகாத்மா காந்தி தன்னுடைய தோல்வி என்று குறிப்பிட்டதை எண்ணி நேதாஜியின் மனம் வேதனையுற்றது.

காந்தியடிகளின் விருப்பத்தை அறிந்த மற்றைய காங்கிரஸ் தலைவர்கள், நேதாஜியுடன் ஒத்துழைக்க மறுத்தார்கள். நேதாஜி தன்னுடைய கடமையைச் செவ்வனே செய்யமுடியாத நிலையை, காங்கிரஸ் கட்சிக்குள் சிலர் உருவாக்கினார்கள். ஆகவே, வேறுவழியின்றி நேதாஜி தன்னுடைய தலைமைப் பதவியை இராஜினாமாச் செய்தார். கல்கத்தாவில் உள்ள 'ஸ்ரா பூங்கா' வில் நேதாஜி நிகழ்த்திய 'நான் ஏன் இராஜினாமா செய்தேன்' - என்ற சொற்பொழிவு செறிவும் பொருநத்தமும் நிறைந்த பிரசித்தமான தொன்றாகும்.

நேதாஜியோ வாளாவிருக்கவில்லை. ஜேர்மனி,ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகளுடன் நேதாஜி ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டு அதில் கையெழுத்திட்டார். இந்திய நாட்டில் வேரூன்றிய அன்னிய ஆட்சியை அகற்றுவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதாக இந்த மூன்று நாடுகளும் அந்த ஒப்பந்தத்தில் கூறியிருந்தன.

நேதாஜி பல நாடுகளுக்கும் சென்று இந்திய தேசிய இராணுவத்தைக் கட்டியெழுப்பி பயிற்சி கொடுத்தார். பயிற்சி முற்றுப் பெற்ற வீரர்களைப் பகுதிபகுதியாகப் பிரித்தார். சிங்கப்பூர், பர்மா, மலேசியா, தாய்லாந்து நாடுகளுக்குத் தன்னுடைய படைவீரர்களை அனுப்பினார். நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத்தின் அங்கங்களாக - ஜான்ஸிராணி என்கின்ற பெண்கள் படையும், பாலர் படையும் இருந்தன. பன்னிரெண்டு வயதிற்கு மேல், பதினெட்டு வயதிற்கு உட்பட்ட இளையவர்களின் படையே, பாலர்படை என்று அழைக்கப்பட்டது. இந்தப் படையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட இளையவர்கள் இருந்தார்கள்.

இரண்டாவது உலகப்போரில் ஜப்பான் கைப்பற்றிய அந்தமான், நிக்கோபார் தீவுகளை, ஜப்பான் அரசு நேதாஜியிடமே கையளித்தது. 1943 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி இந்தியாவின் மூவர்ணக் கொடியை அந்தமான் தீவில் நேதாஜி பறக்கவிட்டார்.

1944 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதியன்று, நேதாஜியின் இராணுவம் இந்திய மண்ணில் கால் பதித்தது. நாகலாந்து, மணிப்பூர் சமஸ்தானங்களைக் குறிவைத்து படைகள் முன்னேறின. இடைவிடாது போரிட்டு, மணிப்பூரின் பல பகுதிகளை இந்திய தேசிய இராணுவம் கைப்பற்றியது. மணிப்பூரின் தலைநகரம் இம்பால், அதைக் கடந்து விஷ்ணுப்பூர் என்று நேதாஜியின் இராணுவம் முன்னேறியது. விஷ்ணுப்பூர் பிடிபட்டால் பிறகு வங்காளம், டெல்லி என்று முன்னேற வாய்ப்பிருந்த வேளையில், ஜப்பான், அமெரிக்காவிற்கு அடிபணிந்தது. நேதாஜியின் படை, பர்மாவிற்குப் பின்வாங்க நேர்ந்தது. நேதாஜியோ கலங்கவில்லை. 'நாம் ஆடிய முதல் ஆட்டம் இது. இதில் தோற்றுப் போனாலும், இத்தோல்வியே இனி வரும் வெற்றிகளுக்குப் படிக்கல்லாக அமையும்' என்று முழங்கினார். ஆனால், 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி அன்று - சரியாக 58 ஆண்டுகளுக்கு முன்பு - விமான விபத்தில் நேதாஜி உயிர் இழந்ததாக அறியப்பட்டது.

**மெல்பேர்ணிலிருந்து சபேசன்**

நேதாஜி அஞ்சாநெஞ்சம் படைத்த தீர்க்கதரிசியாக விளங்கினார். ஆங்கில - அமெரிக்க ஏகாதிபத்தியம் குறித்து 58 ஆண்டுகளுக்கு முன்பு நேதாஜி கூறியது, இன்று அப்படியே நடக்கிறது. 'அமெரிக்க எஜமானனின் கைப்பிடிச் சங்கிலியில், பிணைக்கப்பட்ட ஏவல் நாயாகவே எதிர்காலத்தில் பிரிட்டன் விளங்கும்' என்று நேதாஜி அன்றே சொன்னார்.

சற்று ஆழமாகக் கூர்ந்து நோக்கினால், நேதாஜியின் தூண்டுதலும், போராட்டங்களும், கருத்துக்களும், நடவடிக்கைகளும்தான், காந்தியடிகள் ஆக்ரோஷமான பாதையை உத்வேகத்துடன் தேர்ந்தெடுக்கக் காரணமாக இருந்தது, என்பது புலனாகும். ◆



**'சுபாஸ் சந்திரபோஸின் வாழ்க்கை என்னைக் கவர்ந்தது. அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் நூல்வடிவில் வந்தன. அவற்றைப் படித்தேன். அவை அப்படியே என் நெஞ்சில் படிந்தன. கடைசித்துளி இரத்தம் இருக்கும்வரை என் மண்ணுக்காக நான் போராடுவேன், என்ற சுபாஸின் வீர உரையை எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். நினைவிற்கு வரும் போதெல்லாம் இந்தச் சொற்கள் என் நெஞ்சைச் சிலிர்க்க வைத்தன.'**

**-வே.பிரபாகரன்-**

## தற்கொலைத் தாக்குதலின் எதிரொலி
# காஸாவின் பிரதான பாதையை இஸ்ரேலிய அரசு மூடியுள்ளது!

(காஸா)

கடந்த செவ்வாய்க்கிழமை ஜெருசலேமில் நடைபெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் எதிரொலியாக, காஸாவிற்கான பிரதான பாதையை இஸ்ரேல் தடைசெய்துள்ளது. இதன்மூலம் அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்ட சமாதானத்திற்கான பாதை வரைபும் செயலற்றுப்போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேல் படைகள் பலஸ்தீன நகரங்களான ஜெனின், நப்லூஸ் ஆகியவற்றுக்குள் கவசவாகனங்களுடன் சென்றுள்ளன.

இதனிடையே காஸாவின் பிரதான வைத்தியசாலையிலிருந்து கொண்டுசெல்லப்பட்ட ஹமாஸ இயக்கத் தலைவர் 'இஸ்மாயில் அபு ஸனாப்' இனதும் அவரது பாதுகாப்பாளர்கள் இருவரதும் உடல்கள் -அடக்கத்திற்காக ஆயிரத்துக்குமதிகமான ஆதரவாளர்கள் சூழ ஹமாஸ் தீவிரவாதிகளின் ஊர்வலத்தில் எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜூன் 29 அன்று, ஹமாஸ் இஸ்லாமிய தீவிரவாதிகள்



தற்காலிக போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து தம்மை விலக்கிக்கொண்டுள்ளதாகவும், ஹமாஸ் இயக்கத் தலைவரின் கொலைக்கெதிராகப் பதில் தாக்குதல் நடத்தப்போவதாகவும் எச்சரித்துள்ளனர்.

## ஈராக்கில் கொல்லப்பட்ட
# ஐ.நா. பிரதிநிதியின் உடல் நாளைமறுநாள் அடக்கம்!

(பக்தாத்)

ஈராக்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபைக் காரியாலயம் மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்ட, ஈராக்கிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி டெசியோ பியெரா டிமெலினது உடல் - இறுதி அஞ்சலிக்காக அவரின் பிறந்த இடமான பிரேசிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. அங்கு - அவர் மனைவியின் பிறப்பிடமான பிரெஞ்சு, சிவிஷ் எல்லைப் பகுதியில் அமைந்த தொ நொன் லெஷ் பெயின் என்ற இடத்தில் நாளை மறுதினம் அடக்கம் செய்யப்படவுள்ளது.

இவரின் தலைமைக்காரியாலயம் ஜெனிவாவில் அமைந்திருந்தும், கடந்த 30 ஆண்டுகாலப் பகுதியில், ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்தவராக இருந்து கொண்டு, போரால் பாதிக்கப்பட்ட உலக நாடுகள் பல



கொல்லப்பட்ட அதிகாரி

வற்றிற்கு சென்று கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரை, ஈராக்கின் சிறந்த நண்பன் என்று ஈராக்கில் உள்ள தற்காலிக அரசு அறிவித்துள்ளது.

# பாகிஸ்தான் சோதனைச் சாவடி மீது ஆப்கான் படை பிரங்கித் தாக்குதல்!

(கராச்சி)



பாகிஸ்தானின் பெஷாவருக்கு வடகிழக்கே ஒரு சோதனைச் சாவடி மீது, ஆப்கானிஸ்தான் படைவீரர்கள் கடந்த புதன்கிழமை பீரங்கித் தாக்குதல் நடத்தியதாக அரச அதிகாரி அப்துல் ரஹ்மான் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தான் படையினரின் 4 பீரங்கிக் குண்டுகள் சோதனைச் சாவடி அருகே வந்து வீழ்ந்து வெடித்ததாகவும் -

சம்பவத்தில் பாகிஸ்தான் தரப்பில் உயிர்ச்சேதங்களோ, காயங்களோ ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பாக். வெளிநாட்டமைச்சர் ஆப்கானிஸ்தானுக்கு விஜயம்

(கராச்சி)

பாகிஸ்தானின் வெளிநாட்டமைச்சர் குர்சிட் கசூரி, அண்மையில் இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு வெள்ளியன்று ஆப்கான் தலைநகர் காபூல் சென்றுள்ளார்.

தலிபான், அல்கொய்டா தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் மண்ணில் தமது தீவிரவாதச் செயற்பாடுகளுக்குத் தளம் அமைத்துள்ளதாக ஆப்கான் ஜனாதிபதி கமிர் கசாய் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

ஆப்கானில் உள்ள அமெரிக்கப் படைகளுக்கும், ஆப்கான் படைகளுக்கும் எதிராக அண்மைக்காலத்தில் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

2001 இல் அமெரிக்கப் படையினரால் தலிபானியர்கள் தோற்கடிக்கப்பட்ட பின், சென்ற வாரம் ஆப்கானின் வடக்கு, தெற்கு பகுதிகளில் தீவிரவாதிகளின் தாக்குதலில், ஆப்கான் படையினர் பலர் கொல்லப்பட்டுள்ளார்கள் இதனால் இரு நாடுகளும் புலனாய்வு தொடர்பான அறிவைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சர் கேட்டுக்கொண்டார்.

## டேவிட் கெலி மரணம் தொடர்பாக
# பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் விசாரணைக்குழு முன் சாட்சியம்!




பிளேயர்

பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் தற்போது கரிபியன் நாட்டில் உள்ள பார்படோசில் விடுமுறையைக் கழித்து வருகிறார்.

இவர், அடுத்த வாரம் பிரித்தானியாவுக்குத் திரும்பியதும், ஈராக்கின் போர் ஆயுதங்கள் தொடர்பான அறிஞர் டேவிட் கெலியின் தற்கொலைக்கான காரணங்களை ஆராயும் கற்றன் விசாரணைக்குழுவுக்கு சாட்சியம் அளிக்கவுள்ளார்.

பத்திரிகையில் பிரசுரிப்பதற்கென 9000 பக்கங்கள் கொண்ட விசாரணை தொடர்பான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றில், இதுவரை தெரிவிக்கப்படாத உண்மைகளை பொதுமக்களும் பத்திரிகைகளும் அறிய முடியுமென தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை நடந்த கற்றன் விசாரணையில் புதிய திருப்பமொன்று ஏற்பட்டிருந்தது. அதில், இங்கிலாந்து ஈராக்கின் மீது



கெலி

போர் தொடுத்தால் தான் காட்டில் இறந்திருப்பதைக் காணலாம் என டேவிட் கெலி கூறியதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.




# கோமா நிலையிலிருந்தவரை சவச்சாலையில் மீட்ட மகள்!

வியட்நாமில், நுகூயென் வான் குவான் என்ற 73 வயதுடைய முதியவரை, மருத்துவர்கள் இறந்துவிட்டதாகத் தெரிவித்து வைத்தியசாலையில் உள்ள சவச்சாலையில் வைத்திருந்தார்கள். புதைப்பதற்கான ஒழுங்குகளை செய்தபின் தந்தையின் உடலை வீட்டிற்கு எடுத்துச் செல்வதற்காக, வைத்தியசாலையின் சவச்சாலைக்கு சென்ற மகளிற்கு ஆச்சரியம் ஒன்று காத்திருந்தது. தந்தையின் உடலுக்கு அருகில் சென்றபோது, அவரின் உடலைச் சுற்றியிருந்த கம்பளிப் போர்வை நகரத் தொடங்கியது. உதடுகளில் இரத்தம் வடிந்தவாறு அவர் காட்சியளித்தது மகளிற்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

நெஞ்சு நோ எனத் தெரிவித்ததால், வைத்தியசாலையில் தந்தை அனுமதிக்கப்பட்டதாகவும், திடீரென அவர் கோமா நிலைக்கு மாறியதை உணராத வைத்தியர்கள் - அவர் இறந்துவிட்டதாகக் கருதி சவச்சாலைக்குள் வைத்திருந்தாகவும், சவச்சாலையில் கடும் குளிரைத் தாங்க முடியாமல் கோமா நிலையிலிருந்து மீண்டபோது, பல்லால் உதட்டைக் கடித்ததால் இரத்தம் வெளியேறிதாகவும் சின் மிங் கிடி வைத்தியசாலை அதிகாரி தெரிவித்தார்.

# ஈராக்கை பாதுகாப்பது அமெரிக்காவின் கடமை!
## கோபி அனான் தெரிவிப்பு!



ஈராக்கைப் பொறுத்தவரையில் அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபை இரண்டுமே பல தவறுகளைச் செய்துள்ளன. அங்கு அனைவரினதும் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது, அமெரிக்காவின் கடமையாகும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அனான் மேலும் கூறுகையில்,

நாமெல்லாம் இப்போது நியூயோர்க்கில் இருக்கிறோம். நாம் வசிக்கும் பகுதியில் சந்தேகப்படும்படியான நபர்களின் நடமாட்டம் இருந்தாலோ அல்லது நாம் தாக்கப்படும் ஆபத்து இருந்தாலோ அங்கு காவலையும் கண்காணிப்பையும் தாங்களாகவே பலப்படுத்த வேண்டியது பொலிஸாரின் கடமையே தவிர, நம்மிடம் கேட்டு அதை அமுல் செய்யவேண்டிய அவசியம் இல்லை.

அப்படியே அமெரிக்க அதிகாரிகள் கேட்டு, ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் யாராவது எங்களுக்கு பாதுகாப்பு தேவையில்லை என்று மறுத்திருந்தால் அதுவும் கண்டிக்கத்தக்கது. அது குறித்து உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்போம்.

ஈராக் மீதான விவகாரத்தில் அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படை சில தவறுகளைச் செய்தது. ஐக்கிய நாடுகள் சபை அமைப்பும் சில தவறுகளை செய்துள்ளது. இதில் யாரையும் சுட்டிக்காட்டி குறைகூற நான் விரும்பவில்லை. கடந்த செவ்வாய் நடந்த மனித குண்டுத் தாக்குதலால் நாங்கள் நிலைகுலைந்துவிட மாட்டோம். இடைவிடாமல் எங்கள் பணியைத் தொடருவோம் என்றார்.

# ஈராக்கிற்கு படை அனுப்புவதில் நாடுகளுக்கிடையில் முரண்பாடு

சர்வதேச நாடுகள் ஈராக்கின் பாதுகாப்பிற்கு தமது படைகளை அனுப்ப வேண்டும் எனக் கோரும் மசோதா ஒன்றிறகான முயற்சிகளை ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா மேற்கொண்டுள்ளது. ஜேர்மனி, ரஷ்யா போன்ற நாடுகள் ஈராக்கிற்கு படைகளை அனுப்ப முன்வந்துள்ளன.

ஆனால், அமெரிக்கப் படையின் கட்டளைக்குட்பட்டு இயங்க விரும்பவில்லை

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தமது படைகளை அனுப்புவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளன.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தாக்குதலின் பின் ஜப்பான், தாய்லாந்து ஆகிய நாடுகள் தமது படைகளை அனுப்புவதற்கு தயக்கம் காட்டி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



கடந்த செவ்வாய்க்கிழமை ஜெருசலேமில் நடைபெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து, பலஸ்தீனத் தீவிரவாதிகளுக்கெதிராக இஸ்ரேல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இஸ்ரேலியப் படைவீரர் ஒருவர் பல்குழல் பீரங்கிக்குள் செல் ஒன்றைச் செலுத்தும் காட்சி.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கண்ணிவெடிகளை அகற்றும் பயிற்சி படையினருக்கு அமெரிக்கா வழங்கும்

## ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்து

வடக்கு - கிழக்கில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கான பயிற்சிகளை, இலங்கை இராணுவத்துக்கு வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை, நேற்று கைச்சாத்திடப்பட்டதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அமெரிக்க நிபுணர்கள் நான்கு பேர் உட்பட ஆறு பேர் அடங்கிய குழுவொன்று, நாளை முதல் இராணுவத்துக்கு பயிற்சிகளை வழங்கவுள்ளது.

பயிற்சிகள் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம்வரை தொடரும் என்று, அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுமார் 22 லட்சம் அமெரிக்க டொலர் செலவில் வழங்கப்படவுள்ள நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான பயிற்சிநெறி ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும் அமெரிக்க தூதரக விவகாரங்களுக்கான பொறுப்பதிகாரி ஜேம்ஸ் எவ்.என்விஸ்லும் கைச்சாத்திட்டனர்.

பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற இந்த நிகழ்வில்- இராணுவத் தளபதி லெப் ஜெனரல் லயனல் பலகல்ல, பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் திஸ்ஸ கரலியத்த மற்றும் படையதிகாரிகள், அமெரிக்கத் தூதரக அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.





பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கண்ணிவெடி அகற்றும் பயிற்சியை படையினருக்கு வழங்குவது தொடர்பான ஒப்பந்தத்தில் அமெரிக்கத் தூதரக அதிகாரி ஜேம்ஸ் எவ்.என்விஸ்ல் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின்பெர்ணான்டோ ஆகியோர் கைச்சாத்திடுவதை முதலாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்ட அமெரிக்க தூதரக, பாதுகாப்பு அமைச்சு, மற்றும் படையதிகாரிகளை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# வடக்கு – கிழக்கு தனி அலகு அல்ல; வெவ்வேறு இரண்டு மாகாணங்கள்

## எதிர்க்கட்சி உறுப்பினர் சரத் அமுனுகம

அரசியலமைப்புக்கு அமைய, வடக்கு- கிழக்கு ஒரு தனியலகு அல்லவென்றும், அது இரண்டு வெவ்வேறு மாகாணங்கள் என்றும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில், இந்த இரண்டு மாகாணங்களும் தற்காலிகமாக ஒரு வருடகாலத்துக்கு இணைக்கப்பட்டதாகவும், அவர் கூறினார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஒன்றாக இணைப்பதற்கு, சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்று, முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன தெரிவித்திருந்ததாக, கலாநிதி சரத் அமுனுகம குறிப்பிட்டார்.

இந்த நிலையில், வடக்கு -கிழக்கு நிர்வாகம் தொடர்பாக, ஜனாதிபதி இறுதித் தீர்மானம் ஒன்றை எடுப்பார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# வெளிநாட்டவர்கள் இலங்கைக் கடலில் மீன்பிடிப்பதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

## கொழும்பில் நேற்று நடந்தது

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பில் வெளிநாட்டு மீனவர்கள் கடற்தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கொழும்பு கோட்டைப் பகுதியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நேற்று நடைபெற்றது.

காலி மற்றும் அதனை அண்டிய கடற்பரப்பில், வெளிநாட்டவர் மீன்பிடித்தொழிலில் ஈடுபட இலங்கை முதலீட்டுச் சபை அனுமதி வழங்கியுள்ளதால், அந்தப் பகுதியில் வெளிநாட்டவர்கள் மீன்பிடித் தொழிலில் அதிகளவில் ஈடுபடுகின்றனர்.

இதனால், கடல் வளங்கள் அருகி வருவதாகவும், ஆயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட மீனவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், மீனவர் சங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

வெளிநாட்டவர் மீன்பிடிப்பதற்கு, அரசு அனுமதித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து - நேற்றுக் கொழும்பு கோட்டைக்கு முன்பாகக் கூடிய ஆயிரக்கணக்கான மீனவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் கலந்துகொண்டு, தமது ஆதரவைத் தெரிவித்தார். (01)

## அதிரடிப்படையினர் மீது...

சில நிமிடத்தின் பின், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பள்ளிவாசலிலிருந்து கல்முனை நோக்கி பிரதான வீதி வழியாக பெரும் பரபரப்புடன் ஊர்வலமாக சென்று கொண்டிருந்தனர்.

ஏற்கனவே - கலவரம் வெடிக்கலாம் என்ற அச்சத்தினால் அங்கு பெருமளவு பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் பெருமளவு குவிக்கப்பட்டு பாதுகாப்பு தீவிரப் படுத்தப்பட்டிருந்தது.

பள்ளிவாசலுக்கு சுமார் 500 மீற்றர் தூரத்தில் நின்ற பொலிஸாரும் இராணுவத்தினரும் வீதித்தடைகளைப் போட்டு ஆர்ப்பாட்டக்காரரை தடுத்து நிறுத்தினர்.

இதனையடுத்து அந்தப் பகுதியில் பெரும் களேபரம் ஏற்பட்டது. பல்வேறு பகுதிகளிலிருந்தும் பொலிஸாரும் அதிரடிப்படையினரும் மேலதிகமாக குவிக்கப்பட்டனர்.

இதனையடுத்து அந்தப் பகுதியில் பதற்றநிலை மேலும் தீவிரமடைந்தது. பொலிஸார், அதிரடிப்படையினரை நோக்கி ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களையும் வீசினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வீதித்தடைகளை உடைத்து முன்னேற முயற்சித்தனர். பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் தீவிரமாகச் செயற்பட்டதை அடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பின்நோக்கிச் சென்றனர். இதையடுத்து பிற்பகல் 2 மணியளவில் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது.

அப்பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வருவதாகவும், வீதிகளில் நிற்போர் சுட்டுக்கொல்லப்படுவர் எனவும் பொலிஸார் ஒலிபெருக்கிமூலம் அறிவித்ததையடுத்துமக்கள் கலைந்துசென்றதைத் தொடர்ந்து நிலைமை வழமைக்குத் திரும்பியது. (7)

கணினித்துறையில் பட்டதாரியாக இலவச வழிகாட்டல் கருத்தங்கு

உங்கள் எதிர்காலக் கனவுகளுக்கு வழிகாட்டி
ஊக்கம் அழிக்கக் காத்திருக்கிறார்கள்.

திகதி:- ஆகஸ்ட் 23 ஆம், 24 ஆம் திகதிகளில்
நேரம்:- காலை 10.00 மாலை 4.00.
இடம்:- IIS பிரதான மண்டபம், 100 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

IIS John. Keels Institute துறைசார் வல்லுனர்களினால் இலவசக் கருத்தரங்கு

ஊடக அனுசரணையாளர்: நமது ஈழநாடு

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும், டொனால்ட் கணேசகுமார் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப்போட்டி - இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இன்று ஆரம்பமாகும் ஐம்பது பந்துப் பரிமாற்றங்களைக்கொண்ட இந்தச் சுற்றுப்போட்டி, யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் - சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுக் கழக அணியும்,

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் - கொக்குவில் பி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்ரானலி விளையாட்டுக் கழக அணியும்,

சென்.ஜோன்ஸ் கல்லூரியில்- ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பரீஸ் விளையாட்டு அணியும் மோதவுள்ளன.

## இடிந்த...

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகம் தொடர்பான சட்டவரைபு விடயத்தில், நோர்வே பிரதிநிதியாக எரிக் சொல்ஹெய்ம், அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்து, அந்த சட்டவரைபு விடயத்தில் சில ஆலோசனைகளையும் வழங்குவார்.

அதேவேளை, இலங்கையில சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான சகல முயற்சிகளிலும் நோர்வே அர்ப்பணிப்புடன் தொடர்ந்து செயற்பட்டுவரும். இதில் பல்வேறு விதமான நடைமுறைச் சிக்கல்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பொருளாதார மேம்பாட்டினை அபிவிருத்தி செய்வதற்கு, நோர்வே அனைத்துவிதமான உதவிகளையும் வழங்கவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

## குடாநாட்டு...

நிறுவனங்களின் உதவியும் சகலருககும் கிடைப்பதில்லை. இந்நிறுவனங்கள் பயனாளிகளை தெரிவு செய்வதில் திருப்தியற்ற முறைஉளளது.

மாவட்ட மட்டத்தில் அரசசார்பற்ற நிறுவன திட்ட அமுலாக்கலில், எமது இணையமும் உதவிசெய்யும். ஆனால், அவர்கள் எங்களை பங்காளிகளாக மாற்றவில்லை. துரிதமான அபிவிருத்திக்குத் துடிப்பான கட்டமைப்புத் தேவை. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் மீளக்குடியேறிய 45 ஆயிரம் குடும்பங்களுக்கு நிதியுதவி கிடைக்வில்லை.

வீடு, வருமானம் இல்லாது துன்பப்படுபவர்கள், வலுவிழந்தோருக்கு உதவிகள் கிடைப்பதில்லை.

இதுவரை யாழில் 6000 மில்லியன் ரூபா புனர்வாழ்வுக்கு செலவழிக்கப்பட்டபோதும், மக்களின் வாழ்வில் எவ்வித மாற்றமுமில்லை. தேவையற்ற பாதுகாப்புக் கட்டுப்பாடுகள், சீரற்ற ஆட்சி, திட்டமிடலில் மக்களின் பங்களிப்பு இன்மை, மீன்பிடிக் கட்டுப்பாடு, விவசாய நிலங்களில் விவசாயம் செய்யமுடியாத நிலை போன்றனவையே இங்கு தொடர்கிறது.

புனர்வாழ்வுத் திட்டங்களில் மக்களின் குறைகளைக் கேட்க, மாவட்ட குறைகேள் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். புனர்வாழ்வுக் கொள்கை வகுக் கும் கட்டமைப்பில்- மாவட்ட அரச சார்பற்ற இணையப் பிரதிநிதிகள் இடம்பெறவேண்டும்.

முழுமையான புனர்வாழ்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அமுல்செய்யப்படவேண்டும். பகுதிபகுதியாகத் திட்டங்களைத் தயாரிப்பதில் - மக்கள் வாழ்வில் எவ்வித முன்னேற்றமுமில்லை என, அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வயோதிபர் மீது கடற்படை...

புகுந்த ஐந்து கடற்படையினர் இந்த இரு வயோதிபர்களையும் துப்பாக்கியால் தாக்கியும், கத்தியால் அவர்களது உடலில் ஆழமாகக் கீறல் காயங்களை ஏற்படுத்தியும் உள்ளனர்.

இதன் பின்னர் - அவர்களது தங்கச் சங்கிலி ஒன்றையும் 800 ரூபா பணத்தையும் அபகரித்துச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டது.

இதேவேளை - கடற்படையினர் இந்தத் தாக்குதல் நடவடிக்கையைக் கண்டித்து, தீவகத்தின் பல அமைப்புக்கள் ஒன்றிணைந்து, கண்டன மனு ஒன்றை இன்று காலை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கு கையளிக்கவுள்ளனர்.

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1540 திகதி: 22.08.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Y | 2 | 6 | 1 | 0 | 5 | 6 |

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.60 | 97.00 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 151.80 | 153.37 |
| 1 யூரோ | 104.94 | 106.55 |
| 1 சுவிஸ் பிராங் | 67.92 | 69.14 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 62.20 | 63.00 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.83 |
| 1 சவூதி றியால் | 23.31 | 23.31 |

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.